

உலகப் புகழ் பெறும்

கோவிலூர்த் திருமடம்





கோவிலூர்
ஸ்ரீ கொற்றவாளீஸ்வரர் - திருநெல்லை அம்மன்



ஸ்ரீ லஸ்ரீ முக்தி ராமலிங்க ஞான தேசிக ஸ்வாமிகள்
கோவிலூர்

உ
சிவமயம்

உலகப் புகழ் பெறும் கோவிலூர்த் திருமடம்

சொல்லோவியர்
சொ.சொ.மீ. சுந்தரம்

வெளியீடு
கோவிலூர் மடலாயம்
கோவிலூர் – 630 307.
காரைக்குடி வட்டம்.
சிவகங்கை மாவட்டம்.

முதற் பதிப்பு : 2003
இரண்டாம் பதிப்பு : 2006
மூன்றாம் பதிப்பு : 2010

கோவிலூர் மடாலயம் முகவரி

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் - 630 307.
காரைக்குடி வட்டம் - சிவகங்கை மாவட்டம்.
தொலைபேசி : 04565-236846

நிர்வாகி

திரு. மெ. மெ. மெய்யப்பன்

அறக்கட்டளை நிர்வாக அலுவலகம்
ஜவஹர் தெரு, நியூ டவுன்
காரைக்குடி
தொலைபேசி : 04565 - 237134

நிர்வாகம்

திரு. நா. நாராயணன்
திரு. பி. முரளீதரன்

24-4

ஓம் நமச்சிவாய !

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி
பாகம்பெண்ணுரு ஆனாய் போற்றி

குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க.

திருச்சிற்றம்பலம்

24-4

முன்னுரை - முதற் பதிப்பு

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. (திருமந்திரம் 139)

கல்லாலின் புடையமர்ந்து சிவபெருமான் செய்து காட்டிய தவப்பயன் தமிழ் முருகனாகத் தோன்றியது. தமிழ் மக்களின் தவம் திருவள்ளுவராகத் தோன்றியது. நகரத்தார் பெருமக்களின் தவப்பயன் கோவிலூர் ஆண்டவராக வடிவம் பெற்றது.

சொற்பமுது புரியாத வணிகர் குலத்துக்கு அருள்புரியக் கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகிக் காரைக்குடியில் தோன்றிக் கோவிலூர் ஒளிவளர் விளக்காகி, வேதாந்த ஒளிவீசியது. கோவிலூர்த் திருமடம் வாழையடி வாழையென வளர்ந்து இப்பொழுது பனிரெண்டாம் பட்டமேற்று அருளாட்சி புரியும் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகளின் காலத்தில் உலகளாவிய புகழைப் பெற்றுள்ளது. சுவாமிகளின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி, இச்சிறுநூல், வெளியிடப் பெறுகிறது. பூமாலை வாடும் மணம் பொன் மாலைக்கு இல்லை என்று பாமாலை சூட்டி இறைவன் பாதம் பணிவதுபோல், சமயப்பணியும் சமுதாயப் பணியும் கல்விப்பணியும் கலைப்பணியும் செய்து இந்த நூற்றாண்டின் அப்பரடிகளாக "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று வாழும் நாச்சியப்ப சுவாமிகளின் திருவடியில் இந்தத் தமிழ்மலைரைச் சூட்டி வணங்குகிறேன். அவர்கள் இன்னுமொரு நூற்றாண்டு இருந்து வழிகாட்ட இறையருளை வேண்டி வழிபடுகிறேன்.

திரைகடலோடித் திரவியம் தேடிய நகரத்தார் மரபில், திரைகடல் ஓடிச் சென்று செந்தமிழ் பரப்பிய பெருமை நெற்குப்பை தந்த நிறைகுடமாகிய டாக்டர் தமிழண்ணல் அவர்களுக்கே உரியது. கோவிலூர் மடத்தின் தமிழ்ப்பணிக்கு வழிகாட்டிக் குன்றின் மேலிட்ட

விளக்காகத் திகழும் தமிழண்ணல் அவர்கள் தமிழ் தந்த வாழ்வைத் தமிழுக்காகவே தந்து வாழும் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் ஆவார். அவர்கள் இச்சிறுநூலுக்கு அணிந்துரை தந்து பெருமை சேர்த்துள்ளார்கள். அவர்களுக்கு நன்றி சொல்ல வார்த்தைகள் கிடைக்கவில்லை. செங்கதிருக்கும் செந்தமிழுக்கும் யார் கைம்மாறு செய்ய முடியும்?

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளைச் சேகரிப்பதில் பெரிதும் துணையாக இருந்த பெருந்தகை, கோவிலூர்ச் சுவாமிகள் நினைத்ததைச் செயல்படுத்தும் திறமை மிக்க நிர்வாகி காரைக்குடி நா. நாராயணன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை கலாக்ஷேத்ரா பதிப்பகத்தாரின் வெளியீடுகள் எனக்குப் பல செய்திகளைத் தந்து உதவியுள்ளன. உலகப் புகழ்பெற்ற கலாக்ஷேத்ரா பதிப்பகத்துக்கு என் நன்றி.

இந்நூலை உரிய நேரத்தில் சிறப்பாக அச்சிட்டுத் தந்த காரைக்குடி திருமகள் அச்சகத்துக்கும் என் நன்றி.

"ஆசைபற்றி அறையலுற்றேன்" என்று கம்பன் பாடியது போல, ஆழியினை நாழியினால் அளக்கப் பார்த்தேன். கையளவு கிடைத்தது. கவின் தமிழால் இனித்தது. குற்றங்கள் என்னுடையவை. குணங்கள் கோவிலூர் ஆண்டவரைச் சேர்ந்தவை. படித்துச் சுவைத்துப் பயன்பெறுங்கள்.

20, வடுகக் காவல் கூடத்தெரு, பணிவுள்ள,
மதுரை - 625 001. **சொ.சொ. மீ. சுந்தரம்**

இத்துடன் கடந்த 7 ஆண்டுகளில் நடந்த வளர்ச்சிப் பணிகளை தொகுத்துச் சேர்த்து இப்பதிப்பு வெளியிடப்படுகிறது.

மெ.மெ. மெய்யப்பன்

மூன்றாம் பதிப்பு வெளியீடு :
கோவிலூர்
24.9.2010

24-4

தமிழண்ணல்
முன்னைத் தமிழ்த்துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மதுரை
08.05.2003

முதற் பதிப்பு - அணிந்துரை

இந்நூல் நமது நகரத்தார்க்குரிய கோவிலூர்த் திருமடத்தின் வரலாற்றைச் சுருக்கித் தருகிறது. வணிகவியல் பேராசிரியர், சொல்லோவியர் சொ.சொ.மீ. சுந்தரம் இதனை மிக எளிய, இனிய முறையில் எழுதி, எல்லோர்க்கும் "அறிமுகம்" செய்துள்ளார்.

மிக விரிவாக எழுதவேண்டிய செய்திகள் இதில், சுருக்கமாகத் தரப்பெற்றுள்ளன.

இது நகரத்தார்களே தலைமை ஏற்கும் இடம்.

வேதாந்தம் சிவாகமம் ஆகியவற்றைத் தமிழில் கற்றுத்தரும் மடம். "குலவேறுபாடு கருதாது, இந்திய அறிவுக் கருவூலங்களை அனைவருக்கும் திறந்துவிடவேண்டும்", என்பார் சுவாமி விவேகானந்தர். அதனை இத்திருமடத்தைத் தோற்றுவித்த ஆண்டவர் பெருமான் செயற்படுத்திய இடம் இது. நகரத்தார்கள் மரபு வழியாக 96 ஊர்க்கூட்டம் நடத்தும், பொது இடமாகவும் இது திகழ்ந்து வந்துள்ளது.

இதில் வழிவழி வந்த நகரத்தார் துறவிகள் தலைமை ஏற்ற வரலாறும், ஐந்தாம் பட்டமாக வந்த புதுவயல் வீரப்ப ஞான தேசிக சுவாமிகள் செய்த அரிய பணிகளும் இன்று பனிரெண்டாம் பட்டத்திலமர்ந்து அருளாட்சி செய்யும் சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞான தேசிக அடிகளார் செய்துவரும் செயற்கரும் பணிகளும் முறையாக விளக்கப் பெற்றுள்ளன.

சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞானதேசிக அடிகளாரின் கடந்த எட்டாண்டு அருளாட்சியில் நடைபெற்று வருபவை, மிகுந்த தொலைநோக்குடன், கற்பனைக்கு எட்டாத சிறப்புடன்

திகழ்கின்றன. அமெரிக்க மண்ணில் கிளைமடம் அமைவது அரியதொரு சிறப்பு.

"**நகரத்தார் நலவாழ்வு அறநிலை**" ஒன்றைத் தொடங்கி, கடந்த ஆண்டு மட்டும், வேலை வாய்ப்புள்ள உயர்கல்விக்கு என நகரத்தார் மாணவர்களுக்குக் கடனுதவி செய்திருப்பதை இந்நூலில் படிக்கும் போது மெய்சிலிர்க்கிறது. அதனை பொது அறநிலையாக்கப் புள்ளிக்கு ஆயிரம் ரூபாய் தருவதை, நாம் அனைவரும் நம் கடமையாகக் கருதி செயலிற் காட்ட வேண்டும். நகரத்தார்களுக்கென நகரத்தார்களே செய்து கொள்ளும் தருமங்களில், இது தலைமையிடம் பெறுகிறது; முதன்மை இடமும் பெறுகிறது. இளையோரை ஊக்குவித்து இனத்தை முன்னேற்றும் மிகுந்த தொலைநோக்குடைய அறம் இது என்பது என் பணிவான கருத்து.

"**தினமணி**" ஆசிரியர் திரு. இராம. சம்பந்தம் ஒரு முறை தொலைபேசி வழி என்னிடம் குறிப்பிட்டதுபோல, இதற்காக நாம் நம் அடிகளாரை தலைமேல் வைத்துக் கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கீழ்த்திசை நாடுகள் அடைபட்டதால், நம் இன இளையோர், இன்று அமெரிக்க மண்ணில் குடியேறுகின்றனர். "முன்னேறிய இனம்" (Forward) என முத்திரை குத்தி, நம் இளையோர் படிப்பிலும் வேலை வாய்ப்பிலும் இடம் பெற மாட்டாது, கைவிடப்பட்டுத் தவிக்கின்றனர். இந்நிலையில் கோவிலூர்த் திருமடம் நமக்கு ஒரு கலங்கரை விளக்கம் ஆனது. அமெரிக்க மண்ணில் அமையும் திருமடம் நம் மக்கள் தாய்மொழியை, பண்பாட்டை, சமயத்தை, பழக்கவழக்கத்தை, அடையாளத்தை, முகவரியை இழந்து விடாமல் காப்பாற்றும். விரைவில் நம் சிவநெறியை, செந்தமிழை, செவ்வியல் இலக்கியத்தை, கோயிற்கலைகளை, தமிழ்வழியில் சிவ ஆகமத்தைப் போதிக்கும் திருநெறிய தமிழ்க்கழகம் ஆகப்போகிறது. இந்நூலை ஒருமுறை படித்து, இவ் உண்மைகளை அறிந்து ஒத்துழைப்பது நம் அனைவரின் கடமையாகும்.

சிவநெறியும் செந்தமிழும் தழைக்கும் கோவிலூர்த் திருமடம்

ஸ்ரீ ஆண்டவனை அடைய வேண்டும் என்று உறுதியோடு தேடிய ஆன்மாவின் தேடலுக்கு ஆன்மிகம் என்று பெயர். அந்த ஆன்மிகப் பாதையில் உலகுக்கே வழிகாட்டிய நாடு நம் இந்தியநாடு. இது பாரத வீரர் மலிந்த நன்னாடு. மாமுனிவர் பலர் வாழ்ந்த பொன்னாடு. நபிகள் நாயகம் வழிபட்ட மசூதியில் ஏழு மூலைகள் இருந்தனவாம். ஒரு குறிப்பிட்ட மூலையில் நின்று அவர் அதிக நேரம் வழிபாடு செய்வாராம். ஏன் இந்த மூலையில் மட்டும் அதிக நேரம் நின்று வழிபடுகிறீர்கள் என்று கேட்டபோது "இது இந்தியநாடு இருக்கும் திசையைக் காட்டும் மூலை. இந்தியா ஞான தேசம்" என்றாராம்.

சீனநாட்டில் பழைய காலத்துப் பெரியவர்கள் குழந்தைகளுக்குப் போதிப்பார்களாம். "நீங்கள் பக்தியோடும் ஒழுக்கத்தோடும் வாழ்ந்தால் அடுத்த பிறவியில் புண்ணிய பூமியான இந்தியாவில் பிறப்பீர்கள்" என்று. இவ்வளவு புகழுக்கும் யார் காரணம்? இந்த நாட்டில் தோன்றிய ஞானிகள் காரணம். "வாழ்க்கை என்பது பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட போராட்டமன்று. அது நான் என்பதற்கும் நாம் என்பதற்கும் இடைப்பட்ட பயணம். தொண்டு செய். பிறருக்காக வாழக் கற்றுக்கொள். அன்பு செய். அண்டவன் காட்சியளிப்பான்" என்று அந்த ஞானிகள் செய்த உபதேசம் இந்தியாவை ஞான பூமியாக மாற்றிவிட்டது.

இந்த ஞானக்கூட்டம் வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம். கூடும் அன்பினால் கும்பிடும் கூட்டம். வீடும்

வேண்டாம் என விளங்கிய கூட்டம். நாடு போற்றும் நல்லவர் கூட்டம். ஓடும் செம்பொன்னும் ஒன்றெனும் கூட்டம். இந்த ஞானிகளின் அவதார நோக்கமே மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்துவதுதான்.

ஆலயத்துக்குள் செல்லும் நீர் தீர்த்தமாகிறது. அங்கு கொண்டு செல்லப்படும் துண்டு பரிவட்டமாகிறது. உணவு பிரசாதமாக மாறுகிறது. ஆனால் மனிதன் மட்டும் மாறாமல் அப்படியே திரும்புகிறான். ஏன்? இவனுக்கு நான் யார் என்று தெரியவில்லை. கடவுளிடமிருந்து வருவதுபோல் தோன்றி மீண்டும் கடவுளோடு இணைவது போல் தோன்றும் கடவுளின் பகுதி நான் என்று மனிதனுக்கு உணர்த்துவதே ஆதிசங்கரர் முதல் கோவிலூர் ஆண்டவர் வரை ஞானிகள் உரைத்த அத்துவைதம் (இரண்டற்றது) என்ற சித்தாந்தத்தின் நோக்கம்.

இராமன் கங்கையில் கால் வைத்தான். கங்கை தன்னைக் கழுவிக் கொண்டது. பல ஞானிகள் இந்த மண்ணில் கால் வைத்தார்கள். இந்த மண் மாசுகைளப் போக்கிக் கொண்டது. இந்த ஞானிகளில் குறிப்பிடத்தக்க புகழ் பெற்றவர் காரைக்குடியில், நகரத்தார் மரபில் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சார்ந்த குடும்பத்தில் 1791 ஆம் ஆண்டில் தோன்றிய கோவிலூர் ஆண்டவர் ஆவார். முத்துராமலிங்கம் என்ற இயற்பெயர் பெற்றவர். அடியார்களால் முக்திராமலிங்கம் என்று போற்றப்பெற்றுக் கோவிலூர் மடத்தின் மூலம் மக்களுக்கு ஞானவழி காட்டித் தட்சிணாமூர்த்தியாய் விளங்கிய புனித வரலாறு இவருடைய புகழ் வரலாறு.

மெய்யப்ப செட்டியாரும் வள்ளியம்மை ஆச்சியும் செய்த தவம் முத்துராமலிங்கமாகப் பிறந்தது. இளமையிலேயே இந்தப் பிள்ளைக்கு ஞானநாட்டம் உண்டாயிற்று. இப்பிள்ளையைப் பார்த்த வடநாட்டு யோகி ஒருவர் "இவர் குழந்தையல்ல. நமக்கு ஞானம் கொடுத்து நம்மை ஆளவந்த ஆண்டவர்" என்றார். அது முதல் நகரத்தார்கள் இவரை ஆண்டவர் என்றே அழைத்தனர். ஆண்டவரும் ஆள்பவரும் வணங்கிப் போற்ற ஆண்டவனே ஆண்டவராய்த் தோன்றி நின்றான்.

நாகைப்பட்டினத்துக்கருகில் சிக்கல் என்ற முருகன் திருத்தலம் உள்ளது. அதற்கருகில் உள்ள பொருள் வைத்த சேரியில் வாழ்ந்த உகந்தலிங்க ஞான தேசிகர் என்ற ஞானச் செல்வரிடம் மூன்றாண்டுகள் பாடம் கேட்ட ஆண்டவர் தம்முடைய பதினாறாவது வயதில் வேதாந்த வித்தகரானார்.

குருநாதர் மனைவி கேட்டுக் கொண்டபடி காரைக்குடிக்கு அருகில் கழனிவாசல் காட்டுப் பகுதியில் மயில் குஞ்சுகளை வளர்ப்பதற்காகப் பிடித்துக் கொண்டு வரப் புறப்பட்ட ஆண்டவர் சிவபெருமானால் சிக்கெனப் பிடிக்கப்பட்டார். என்று நீ அன்று நான் என்று அவன் இவரைப் பற்றிக் கொண்டார். காட்டில் தனியாக இருந்த கொற்றவாளீசர் - திருநெல்லை அம்மையின் சிறுகருவறை இவர் கண்ணில் பட்டது. முன்பு செய்த தவத்தின் ஈட்டம் முதல்வனை அடையாளம் காட்டியது. அடிக்கடி அக்கோயிலுக்குச் சென்ற கடைக்கண் பார்வை. ஒரு நாள் பெருமழை பெய்தது. "சென்றாடும் தீர்த்தங்கள் ஆனார் தாமே" என்று அப்பரடிகள் பாடிய ஆண்டவனுக்கு, மழையின் மூலம் இயற்கையன்னை திருமுழுக்காட்டியதைக் கண்டார் ஆண்டவர். கோயிலில் இருந்த கூரையை மாற்றிப் பனையோலை போட

எண்ணினார். மறுநாள் தொழிலாளர்கள் வந்தனர். அவர்கள் கொட்டகையின் மீது ஏறியதும் கொட்டகை முழுவதும் சாய்ந்தது. ஆண்டவர் இக்கோயிலைக் கற்கோயிலாக்க எண்ணம் கொண்டார். வீட்டுக்குப் போனபின், அடியார்கள் நினைவில் அம்மையின் பணியை மறந்துவிட்டார். அம்மை ஆண்டவரின் அன்னை வள்ளியம்மை ஆச்சியின் கனவில் தோன்றி "உன் மகன் நான் இருந்த வீட்டைக் கற்பணியாக்குகிறேன் என்று சொல்லி, இருந்த கொட்டகையையும் பிரித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டானே! இது சரியா?" என்று கேட்டு மறைந்தாள். இதைக்கேட்ட ஆண்டவர் அம்மையைக் காணும் பேறுபெற்ற தாயை வாழ்த்தி வணங்கித் திருப்பணி தொடங்கினார். நகரத்தார்கள் பொருளுதவியோடு 1808இல் இத்திருப்பணி தொடங்கப் பெற்றது. அழகிய கலைச் செல்வமாக விளங்கும் கோவிலூர் ஆலயம் ஆண்டவர் பெருமையை விளக்கும் அருட்கோட்டையாகவும் தகழ்கிறது.

இறைவனுக்குக் கற்கோயில் கட்டிய ஆண்டவர் செந்தமிழ் மாலையாகச் சொற்கோயிலும் கட்டினார். கவிதையிலும் உரைநடையிலும் வேதாந்தக் கருத்துக்களை விளக்கினார். இறைவனும் ஆன்மாவும் இரண்டல்ல என்பதைக் கீழே கண்ட நிகழ்ச்சி விளக்குகிறது.

அரசத் துறவி என்று சான்றோர்களால் போற்றப்படும் ஜனகர் ஒரு கனவு கண்டார். பகையரசர்கள் அவரோடு சண்டையிட்டு வெற்றி பெற்றனர். நாடு போய்விட்டது. சுற்றத்தார் எல்லாம் சண்டையில் இறந்துவிட்டார்கள். உண்ண உணவில்லை. ஜனகர் பசியோடு வந்து ஒரு வீட்டின் வாயிலில் நிற்கிறார். பிச்சை கேட்கிறார். புளித்த கஞ்சி போடப்பட்டது. ஆசையோடு அதை உண்ணப் போகிறார். ஒரு நாய் வந்து தட்டிவிட்டது. காடிக்கஞ்சியும்

ஓடிப் போயிற்று. துன்பத்தால் ஐயோ என்று அலறினார். விழித்தார். எல்லாம் கனவு என்று தெரிந்தது. இவர் அலறியதைக் கேட்ட அரசியாரும் மந்திரிகளும் ஓடிவந்து சுற்றிலும் நிற்கிறார்கள். கனவையும் நனவையும் நினைத்துப் பார்க்கிறார் ஜனகர். கனவில் நான் பிச்சைக்காரன். இப்பொழுது பேரரசன். இதுவா? அதுவா? எதுவுண்மை? என்று மனம் கேட்டது. எல்லோரையும் பார்த்தார். இதுவா? அதுவா? என்று கேட்டார். யாரைப் பார்த்தாலும் இதுவா? அதுவா? என்று கேட்கத் தொடங்கினார். அனைவரும் மன்னனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று நினைத்தார்கள். இறுதியில் ஒரு ஞானி நிலைமையை உணர்ந்து கொண்டார். ஜனகரைப் பார்த்தார். "அரசே! உண்மை என்பது என்றும் இருப்பது. சத்தியம் நித்தியமானது. கனவில் நீ பிச்சைக்காரனாகக் காட்சியளித்தாய் இப்பொழுது அப்படியில்லை. எனவே அந்தக் காட்சி பொய். இப்பொழுது அரசனாக இருக்கிறாய். ஆனால் கனவில் அப்படியில்லை. எனவே இதுவும் பொய்", என்றார். மன்னன் கேட்டான் "எது உண்மை"? ஞானி கூறினார். "கனவில் நீ இருந்தாய் நனவிலும் நீ இருக்கிறாய். எனவே நீ மட்டுமே உண்மை. உன்னுடைய ஆன்மா மட்டுமே உண்மை" என்றார். மன்னன் மீண்டும் கேட்டான். "இந்த உண்மைநிலை ஆன்மாவுக்கு எப்படி வந்தது?" ஞானி விளக்கினார். இது வந்ததன்று என்றும் இருப்பது. ஆண்டவனும் ஆன்மாவும் இரண்டு போலத் தோன்றினாலும் இரண்டற்றவை. ஆண்டவனே ஆன்மாவைப் போல் தோன்றுகிறான். (அத்துவைதம்) ஆண்டவன் உண்மை. எனவே ஆன்மாவும் உண்மை. மற்ற நிகழ்வுகள் அனைத்தும் தோற்றங்களே ஆகும். உயிர் பிறந்து வாழ்வது போலவும் இறப்பது போலவும் தோன்றுகிறது. இது உண்மையன்று. ஆன்மாவை இவன் நான் என்பதும் ஆண்டவனை அவன், அது என்பதும் கற்பனை. இவை பேதமற்றவை என்பதே உண்மை. "எல்லாப் பொருள்களும்

பேரறிவுப் பரம்பொருளே ஆகும். அதைப் பற்றிக் கொண்டால் மனமயக்கம் தீரும்" என்றார். இவ்வளவு பெரிய தத்துவத்தை சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகும் சிவஞானமும், செந்தமிழ்பாடும் புலமையும் பெற்ற கோவிலூர் ஆண்டவர் ஒரு திருப்பாடல் ஆக்கினார்.

சுவர் உறையும் ஓவியங்கள் சுவரே என்றால்
சுபாவதி போல்பரத்தில் தோன்றா நின்ற
பவமுதலாம் சங்கற்ப விகற்ப மெல்லாம்
பரவடிவாய்க் கண்டுபர வடிவ மான
தவர் உறையும் கழனிநகர்க் கொற்ற நாதன்
தனதருளால் பேதமதி நாயி னேனுக்கு
இவன்அவன் நான் அதுவென்னும் பேதமின்றி
எவ்வுருவும் சின்மயமாய் இருந்த வாறே.

சுவரில் வரைந்த ஓவியங்கள் சுவர்தானே. பரம்பொருளின் நிழல்தானே பிறப்பும் இறப்பும். இந்த அறிவு வரவேண்டுமானால் கழனிநகர் என்று உலகம் போற்றும் கோவிலூரில் கொற்றவாளீசன் திருவருள் கிடைக்க வேண்டும் என்று பாடினார் இந்தப் பரமஞானி. அவர் பாடிய சுவானுபவத் திருவாக்கு என்ற நூலில் இது ஏழாவது பாடல். இதே கருத்தை இன்னும் சுருக்கமாக 48ஆம் பாடலில்

ஆறாறும் பொய்யாம் அதில்பயனும் பொய்யாகும்
ஆறாறும் பொய்யாய் அறிவதும்பொய் – ஆறாறு
கையானைத் தந்த கழனித் திருநெல்லை
மெய்யாம் அவள் சரணம் மேவு.

"முப்பத்தாறு தத்துவங்களும் பொய். அவற்றின் விளைவும் பொய். இவற்றைப் பொய் என்று உணரும் ஆன்மாவும் ஆண்டவன் தோற்றம்தான் என்பதால் அதுவும் பொய். பனிரெண்டு கைகளை உடைய முருகப் பெருமானைத் தந்த திருநெல்லை அம்மை ஆண்டவனின் பேரருள் வடிவமானவள். எனவே அவள் மட்டுமே உண்மை. அவளைச் சரணடைவீர்களாக" என்று பேசுகிறார் கோவிலூர் ஆண்டவர். அவருடைய திருவாக்குகளில்

1. செனன மரணமும் நினைவு மாத்திரம்.

2. பேரறிவிலே சமசாட்சிதான். பேதங்கள் எல்லாம் சிற்றறிவிலேதான்.

3. பழுதையிலுண்டான பாம்பு பழுதையே என்று சொல்லலாம். அதுபோலப் பிரமத்தில் உண்டான சகத்துப் பிரமம் தான்.

4. சோகத்தினாலே துக்கத் தோற்றம் மோகத்தினாலே சுகத்தோற்றம்.

5. தன்னைச்சீவ பாவனையாகக் காண்பதே பிறவி. தன்னைச் சிவரூபமாய்க் காண்கிறதே மோட்சம்

ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

செல்வத்துப் பயன் தந்த செம்மல்

திரைகடலோடித் திரவியம் தேடிய நகரத்தார்களைத் திருப்பணியில் ஈடுபடுத்திச் செல்வத்தின் பயனைப் பெறச் செய்த பெருமை கோவிலூர் ஆண்டவருக்கே உரியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோவிலூரில் அருள்பொழியும் திருநெல்லை அம்மைக்கும் கொற்றவாள் ஈசருக்கும் ஆலயத் திருப்பணி தொடங்கிய ஆண்டவர் இப்பணிக்கு நகரத்தார் ஈட்டிய செல்வம் பயன்படச்செய்தார். சிவப்பணிக்குப் பொருள் தந்து ஈத்துவக்கும் இன்பம் பெற்ற நகரத்தார்கள் அதன் பிறகு காசி முதல் கன்னியாகுமரிவரை தெய்வத் திருப்பணிகள் செய்து செல்வத்தில் மட்டுமின்றிச் சிவபெருமான் திருப்பணியிலும் மன்னர் பின்னோர் ஆக விளங்கினர். இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாய் நின்ற முத்துராமலிங்க ஞான தேசிகர் கருணையை வியந்து வரகவி சேந்தனி பழனியப்ப ஐயா என்பவர்

மடமுண்டோ? சிவாலயங்கள் மிகுதி உண்டோ?
வாசிட்டம் படிப்பதுண்டோ? மனத்துள் ஞானத்
திடமுண்டோ? நார்வர்தமிழ் படிப்பார் உண்டோ?
திவ்வியமாம் உதாரமுதல் குணங்கள் உண்டோ?
விடமுண்டோன் அடியர்குழாம் மிகுதி உண்டோ?
மெய்யறம்சத் திரம்விரைப்பூங் காவுமுண்டோ?
வடகயிலைக்கு இறைவன் எனும் முத்து ராம
வள்ளல் திருக் கழனிநகர் வாரா முன்னம்!

என்று பாடிப் பணிந்தார். நகரத்தார் சமூகத்தில், பட்டினத்தாருக்குப் பிறகு சற்று விட்டுப் போன துறவு, ஆண்டவர் வந்தபின் அதிகமாயிற்று. பிற்காலத்தில் இந்த ஞானப் பக்குவம் தன்னை அர்த்தமுள்ள இந்துமத மாகவும் அடையாளம் காட்டிக் கொண்டது. இப்பொழுது அமெரிக்க மண்ணிலும் ஆண்டவனின் புகழ் ஒளிவீசத் தொடங்கிவிட்டது.

கோவிலூர் மடம்

நான்கு வேதங்களையும், வேதாந்த உண்மைகளையும், வடமொழிப் பயிற்சியற்ற தமிழ்ப்பெருமக்கள் அறிய வேண்டும் என்பதற்காகக் கோவிலூர் ஆண்டவரால் 1809ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது கோவிலூர் மடம்.

வேதம் பயிலச் சாதியோ மதமோ இனமோ மொழியோ தடையில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டு வேதாந்தப் பாடங்களை முறையாகக் கற்றுத்தரும் இந்த மடம் தமிழில் வேதாந்தம் சொல்லத் தொடங்கிய முதல் மடமாகும்.

சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தத்துவராய சுவாமிகளும் சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சாந்தலிங்க சுவாமிகளும் பல வேதாந்த நூல்களை இயற்றியும் மொழி பெயர்த்தும் தந்தார்கள். இவற்றோடு பிற வேதாந்த நூல்களையும் சேர்த்து வேதாந்தப் பாடத் திட்டம் அமைக்கப்பெற்றது. ஒரு பல்கலைக்கழகம் பட்டப் படிப்பிற்குத் திட்டம் வகுத்துப் பட்டியல் இடுவது போலக் கீழ்க்கண்ட 16 வேதாந்த சாத்திரங்களும் கோவிலூர் மடத்தில் பாடம் சொல்லப்பட்டன.

1. சேஷாத்திரி சிவனார் இயற்றிய நாநாஜீவ வாதக் கட்டளை.
2. திருவேங்கடநாதர் இயற்றிய கீதாசாரத் தாலாட்டு
3. எறும்பூர் தத்துவராய சுவாமிகள் இயற்றிய சசிவன்ன போதம்
4. விருத்தாசலம் குமார தேவர் இயற்றிய மகாராஜா துறவு
5. பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் இயற்றிய வைராக்கிய சதகம்

6. பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் இயற்றிய வைராக்கிய தீபம்

7. கோவிலூர் ஆதீனம் மூன்றாவது பட்டம் கருணாநிதி என வழங்கும் சிதம்பர ஞான தேசிகர் இயற்றிய இலட்சணா விருத்தி.

8. எறும்பூர் தத்துவராய சுவாமிகள் இயற்றிய அஞ்ஞவதைப் பரணி.

9. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தமிழ்ச் செய்யுள் வடிவ மொழிபெயர்ப்பாக அருளிய வேதாந்த சூடாமணி.

10. திருவிடைமருதூர் உலகநாத சுவாமிகள் தமிழில் செய்யுள் வடிவமாக மொழி பெயர்த்த விவேக சூடாமணி.

11. நித்தியானந்த சுவாமிகளும், வீர. சுப்பையா சுவாமிகளும் தமிழில் செய்யுள் வடிவமாக மொழிபெயர்த்த பஞ்சநசி.

12. நன்னிலம் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்யநவநீதம்.

13. எறும்பூர் தத்துவராய சுவாமிகள் தமிழில் செய்யுள் வடிவமாக மொழி பெயர்த்த ஈசுவர கீதை.

14. பட்டனார் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்த பகவத் கீதை.

15. எறும்பூர் தத்துவராய சுவாமிகள் தமிழ்ச் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்த பிரம்ம கீதை.

16. வீரை. ஆளவந்தார் தமிழில் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்த ஞான வாசிட்டம்.

வட இந்தியாவில் கோவிலூர் வேதாந்தப் பாடம் சொல்லும் முறையைப் பாராட்டிக் “கோவிலூர் மண்டலி” (“கோவிலூர் மரபு” எனத் தென்னகத்தில் விளங்குகிறது) என்று போற்றுகிறார்கள்.

வேதாந்தத் தத்துவங்களைப் பரப்பும் இக்கோவிலூர் மடம் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஞான பீடமாக விளங்கி அருளாட்சி நடத்துகிறது. துறவியர் தங்கும் இடமாகவும், வேதாந்தக் கல்லூரியாகவும் விளங்குகிறது. வேதாந்தப் பேரறிவு பெற்ற ஞானிகளை நாடு முழுவதும் அனுப்பி, திருமடங்கள் நிறுவிப் பணியாற்றி வருகிறது.

துறவு என்பது விரிந்த உறவு என்பார்கள். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சங்கத் தொடரின் தன்மையை உணர்ந்து உலகம் முழுவதும் பணிசெய்து மக்கள் தொண்டும் மகேசன் தொண்டும் சிறப்பாகச் செய்வதே கோவிலூர் மடத்தின் குறிக்கோளாகும். இம்மடத்தில் பயின்ற மாணாக்கர்கள் தங்கள் ஊர்களில் இதுபோல மடங்களை நிறுவிப் பக்திப்பயிர் வளர்த்துள்ளார்கள். கோவிலூர் மரபின் வழிவழியாக அமைந்துள்ள திருமடங்கள் நூற்றுக்கும் அதிகமாகும். காசிகாநந்த சுவாமிகள் 100 மடங்களை பட்டியல் இட்டுள்ளார்கள்.

கோவிலூர்த் திருமடம் காரைக்குடியிலிருந்து மேற்கே சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் காரைக்குடி - மதுரை நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. அந்த வழியில் செல்லும் பெருமக்களை இங்கே வாருங்கள் என அழைக்கும் இரண்டு பெரிய கோபுர மண்டபங்கள் இறைவன் திருவடிகளான அருளையும் ஞானத்தையும் உணர்த்துவது போல், அழகுற அமைக்கப் பெற்றுள்ளன. அவைகளுக்கு இடையில் நுழைந்து, பெரிய வளவைக் கடந்து மடத்தினுள் சென்றால் காவிரிப்பூம்பட்டினத்தார் கலையுணர்வு காட்சிதரும். கோவிலூர்த் திருமடத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் அனைவரும் இயல்பாகவே கட்டுப்படக்கூடியவர்கள். கோவிலின்

அடிப்படையில் வாழும் குடிகள் என்பதால் அவர்கள் குருபீடமும் கோவிலூராகவே அமைந்தது போலும்.

கோவிலூர் ஆண்டவரின் குருநாதர் உகந்தலிங்க தேசிகர் சிருங்கேரி சங்கர மடத்தின் பரம்பரை மரபு வழி நின்றார். எனவே கோவிலூர் ஆதீனத்தார் சிருங்கேரி சங்கர மடத்தைச் சேர்ந்த சாரதாம்பாள் ஆலயத்தைக் கருங்கல் திருப்பணியாக அமைத்துக் கொடுத்தும் வெள்ளிப் பாத்திரங்கள், வெள்ளிக் கேடகங்கள் செய்தளித்தும் தொண்டாற்றிய பெருமை கோவிலூர் மடத்துக்கே உரியது. கோவிலூரில் நிகழும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் சிருங்கேரி பீடாதிபதி கலந்து கொள்வது வழக்கமாக உள்ளது.

கோவிலூர் மடம் எல்லா ஊர்களிலும் உள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் அனைவருக்கும் அருளும் திருமடமாகும். நகரத்தார் இனத்தில் பிறந்த துறவிதான் மடாதிபதியாக வரும் உரிமை உடையவர் என்ற மரபை உடையது.

2. துறவு ஆண்டவர் - (1847 - 1849)

கோவிலூர் ஆண்டவருக்கும் அடுத்ததாகத் தேவகோட்டையில் பிறந்த சீர் வளர் சீர் அருணாசல ஞான தேசிகர் பட்டமேற்றுக் குறுகிய காலமே அருளாட்சி புரிந்தார்கள். அவர்கள வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லவர்கள். கைவல்ய நவநீதத் திற்கு அருமையான உரை ஒன்று எழுதினார்கள்.

3. கருணாநிதி சுவாமிகள் - (1849 - 1865)

மூன்றாம் பட்டம் சிதம்பர சுவாமி என்ற கருணாநிதி சுவாமிகள் துறவு ஆண்டவரின் தம்பி ஆவார்கள். இவர்கள் காலத்தில் கோவிலூர் மடத்தின் வளர்ச்சி முழுவேகம் பெற்றது.

அவர்தம் திருப்பணிகள்

1. சிதம்பரம் மூலத்தானம் ஈஸ்வரன் கோவில் திருப்பணி
2. மதுரை பழைய சொக்கநாதர் கோயில்
3. கோவிலூர் ஆண்டவர் அதிட்டானக் கோயில் கல் திருப்பணி
4. களத்தூர் சிவன்கோயில்
5. கோவிலூர்த் திருக்குளமும் மைய மண்டபமும்
6. கோவிலூர் சோமாஸ்கந்தர் சந்நிதி
7. கோவிலூர்க் கோயிற் திருக்கல்யாண மண்டபம்.

இவர்கள் இயற்றிய நூல்கள்

1. கோவிலூர் வேதாந்தம் பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ள இலட்சனா விருத்தி
2. "பிரும்ம நாமாவளி"
3. "குரு ஸ்துதி குசுமாஞ்சலி"

இவர்தம் புகழ்பெற்ற மாணாக்கர்கள்

1. இராமசாமி ஞான தேசிகர் (நான்காவது பட்டம்)
2. திருக்களர் ஆண்டவர் எனும் வீரசேகர ஞான தேசிகர் (ஐந்தாம் பட்டம்)
3. சிதம்பரம் பொன்னம்பல சுவாமி
4. மானாமதுரை நாராயண சாமி

4. நான்காவது பட்டம்

<u>இராமசாமி ஞான தேசிகர்</u> - (1876 - 1883)

காரைக்குடியில் பிறந்தவர். நல்ல வேதாந்தி. சிறந்த ஆசிரியர்.

செய்த திருப்பணிகள்

1. கோவிலூர்க் கோவில் அஷ்டலெட்சுமி மண்டபம்
2. ஆண்டவர் கோவில் திருமதில்
3. கோவிலூர் மடத்தில் அன்னதான மண்டபம்
4. கருணாநிதி சுவாமிகள் அதிட்டானக் கோயில்

இவர்தம் புகழ்பெற்ற மாணாக்கர்

சாக்கோட்டை வீரப்ப சுவாமிகள்

காளையார்கோவில் செல்லப்ப சுவாமிகள்

5. ஐந்தாம் பட்டம்

<u>வீரசேகர ஞான தேசிகர்</u> - (1883 - 1911)

இவர் காலம் கோவிலூர்த் திருமடத்தின் பொற்காலம். இவர் குறித்து விரிவான செய்திகள் தனியாகத் தரப்பட்டுள்ளன.

௬. ஆறாம் பட்டம்

அண்ணாமலை ஞான தேசிகர் – (1911 – 1919)

இராயவரத்தில் பிறந்தவர். வீரசேகரர் மாணாக்கர். வடமொழி தென்மொழிப் புலவர். மிகப்பரந்த அளவிலே தீர்த்த யாத்திரை செய்து ஆன்மீகம் வளர்த்தவர்கள்.

இவர்கள் பதினெட்டுப் புராணங்களையும் தமிழிற் செய்தார்கள். ஆனால் நூல்கள் கிடைக்கவில்லை.

இவர்தம் திருப்பணிகள்

1. திருமடத்திற்காக நிறைய நிலம் வாங்கி வளம் சேர்த்தவர்கள்.
2. திருநெல்லை அம்மன் கோயில் பள்ளியறை.
3. சிதம்பரத்தில் பாவாடை வழிபாட்டைத் தொடங்கினார்கள்.

இவர்தம் புகழ்பெற்ற மாணவர்கள்

சோமசுந்தர ஞான தேசிகர் (எட்டாவது பட்டம்)

திருக்களர் சண்முக சுவாமிகள்

7. ஏழாவது பட்டம்

மகாதேவ ஞான தேசிகர் – (1919 – 1946)

தேவகோட்டையில் பிறந்தவர். இவர் காலம் கோவிலூர் வேதாந்த மரபின் சிகரமாகத் திகழ்ந்தது. ஏராளமான சாதுக்களும் இல்லறத்தார்களும் இவரிடம் வேதாந்தம் பயின்றார்கள். ஏழுமுறை முழுமையாகபட பதினாறு நூல்களையும் நடத்தியவர்கள்.

இவர்தம் திருப்பணிகள்

1. திருக்களர் ஆண்டவர் அதிட்டானக் கோயில்
2. திருக்களர் அருள்மிகு பாரிஜாத வனேஸ்வரர் – திருப்பணி மற்றும் கும்பாபிஷேகம்

3. நல்லூர்ச் சிவன் கோவில் திருப்பணி

4. திருக்களர்த் தலத்தில் ஏராளமான நிலங்களை வாங்கிச் சேர்த்தார்கள்.

இவர்தம் புகழ்பெற்ற மாணாக்கர்கள்

1. சேலம் குகை இராமசாமி அவர்கள்
2. காரியானூர் நடேச சுவாமிகள்
3. திருமழபாடி இராமசாமி சுவாமிகள்
4. மகா. நாராயண சுவாமிகள் (ராஜபாளையம்)
5. திருக்களர் கிருஷ்ணானந்த சுவாமிகள்
6. மகா. நாராயண சுவாமிகள் (திருவண்ணாமலை)
7. மகா. கோவிந்தராஜ சுவாமிகள்

முந்தைய நால்வரும் பின்னர் தனதாக வேதாந்த மடம் ஏற்படுத்தி வேதாந்தம் பரப்பியவர்கள். பிந்தைய இருவரும் இன்றளவும் மாணாக்கர்கட்கு வேதாந்தப் பாடம் சொல்லிக் கோவிலூர் மரபைக் காப்பாற்றி வருபவர்கள்.

8. எட்டாவது பட்டம்

<u>சோமசுந்தர ஞான தேசிகர்</u> – (1947 – 1971)

புகழ் பெற்ற மாணாக்கர்கள்

1. இராமநாத ஞான தேசிகர்
2. பொருள் வைத்த சேரி இராமலிங்க சுவாமிகள்
3. சொரூபாநந்த சுவாமிகள்
4. சோம. கோபால் சுவாமிகள் (சோம. சச்சிதானந்த சுவாமிகள்)

பிந்தைய இருவரும் இன்று வரை கோவிலூர்ப் பாடங்கள் சொல்லி வருகிறார்கள். கோவிலூர் மரபு வளரத் துணை நிற்கிறார்கள்.

9. ஒன்பதாம் பட்டம்

<u>இராமநாத ஞான தேசிகர்</u> – (1971 – 1982)

இவர் அருளாட்சியில், வெளிநாடுகட்குச் சென்று நன்கொடை ஈட்டி திருநெல்லை அம்மன் கோவிலையும் திருமடத்தையும் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்தார்கள்.

10. பத்தாம் பட்டம்

<u>அரு. இராமநாத சுவாமிகள்</u> – (1982 – 1986)

இவர்தம் குறுகிய கால அருள் ஆட்சியில் வழக்கம் போல் ஆன்மீக, சமுதாயப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றன.

11. பதினோராம் பட்டம்

<u>காசிவிசுவநாத சுவாமிகள்</u> – (1986 – 1995)

இவர்கள் காலத்தில் இலக்கியப் பூங்கா என்னும் கருத்தரங்கு நிகழ்ச்சி திங்கள் தோறும் நடத்தித் தமிழ் வளர்த்தார்கள். மேலும் ஏழை மாணவர்கட்கு உணவும் உறையுளும் அளித்து உதவினார்கள்.

12. பனிரெண்டாம் பட்டம்

1995 முதல் காரைக்குடி நாச்சியப்ப ஞானதேசிகர் ஆண்டவரின் பேரனாக அருளாட்சி நடத்தி வருகிறார். ஆண்டவருக்குப் பிறகு கோவிலூர் ஆதீனத்தின் பெருமையை நிலைநாட்டிய மடாதிபதிகளில் ஐந்தாவது பட்டமான மகான் வீரப்ப சுவாமிகளும் இப்பொழுது அருளாட்சி நடத்தும் நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகளும் குறிப்பிடத்தக்க பணியாற்றியவர்கள் ஆவர். இப்பெருமக்களின் வரலாறும் தொண்டும் கோவிலூர் மடம் என்ற பொற்குடத்துக்குப் பொட்டுவைத்ததுபோல் அமைந்தவை. இவர்கள் பற்றிய விரிவான செய்திகள் தனியாகத் தரப்பட்டுள்ளன.

திருக்களர் ஆண்டவர் எனப்படும் மகான் வீரப்ப சுவாமிகள்

நடமாடும் தெய்வமாக நம்மிடையே நூறாண்டுகள் வாழ்ந்த காஞ்சிப் பெரியவர், 1972 கல்கி தீபாவளி மலரில் கோவிலூர் மகான் வீரப்ப சுவாமிகள் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்கள்.

புண்ணியம் செய்தவர்களைப் பற்றி எண்ணுவதாலும் பேசுவதாலும் கேட்பதாலும் நமக்கும் அவர்கள் புண்ணியத்தில் பங்கு கிடைக்கிறது. இந்தக் கதை கேட்பதால் வீரப்ப சுவாமிகளின் சிவ புண்ணியத்தில் எல்லோருக்கும் பங்கு கிடைக்கிறது.

இப்படிப் பாராட்டி வணங்கப் பெற்றவரும் கோவிலூர் ஆதீனத்தை ஐந்தாம் பட்டமாக பொறுப்பேற்று அலங்கரித்தவரும் ஆகிய வீரப்ப சுவாமிகள் புதுவயலில் (1848 ஆம் ஆண்டில்) கீலக ஆவணி 12ஆம் நாளில் அருணாசலம் செட்டியாருக்கும் உமையாள் ஆச்சிக்கும் ஒரே தவமகனாகப் பிறந்தார்கள்.

பத்தாவதாண்டில் வெளிநாடு சென்று பொருளீட்டத் தொடங்கி, பொருளிலும் அதைத் தேடும் வழிகளிலும் விருப்பமின்றி, பொய்ப்பொருளை விட்டு மெய்ப்பொருள் தேட விழைந்து தாய்நாடு திரும்பி புதுவயல் வீரப்பையா, அழகப்பையா ஆகியோருடன் தொடர்பு கொண்டார்கள். அழகப்பையா கொடுத்த பட்டினத்தார் பாடல்களும், அஞ்ஞவதைப் பரணி என்ற வேதாந்த நூலும், ஆன்ம பக்குவத்துக்கு அடிப்படையாக அமைந்தன.

இல்லற விருப்பமின்றித் துறவு வாழ்க்கை வாழ நினைத்து, மணமாகாமல், துறவியாகக் கோவிலூர் சென்றார்கள்.

மடாலயத்தில் சிறுவர்களைச் சேர்ப்பதில்லை என்ற வழக்கத்தை மாற்றி, மூன்றாவது மடாதிபதியான கருணாநிதி என்ற சிதம்பர ஞானதேசிக சுவாமிகள், இவரைச் சேரத்துக் கொண்டார்கள். இதற்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் பொன்னம்பல ஞான தேசிகர். இவர் வீரப்ப சுவாமிகளுக்குப் பாடம் சொல்லி விளையும் ஞானத்தை முளையிலேயே அறிந்து கொண்டவர்.

தக்கவயதில் பொருள் வைத்த சேரியில் உள்ள உகந்தலிங்க ஞானதேசிகர் மடத்தில் தலைமை ஏற்றிருந்த சட்டையப்ப சுவாமிகளிடம் துறவறம் பெற்றுப் பிச்சை ஏற்றுக் கோவிலூரை அடைந்த வீரப்ப சுவாமிகள், வேதாந்தப் பாடநூல்கள் பதினாறையும் பாடம் கேட்டார்கள். கால்நடையாகக் காளையார் கோயில் சென்றும் சிதம்பரம் சென்று வணங்கியும் சிதம்பரம் ஞான தேசிக மடத்தில் பிச்சை ஏற்றுண்டும், இடையறா நிட்டையில் ஆழ்ந்தும் 12 ஆண்டுகள் தவசீலராகத் திகழ்ந்தார்கள்.

திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் தவத்திரு சுப்பிரமணிய தேசிகர் சிதம்பரம் வந்த போது, வீரப்ப சுவாமிகளைப் பாராட்டி, வேதாந்தம் கேட்டுத் திருநீற்றுப்பை வழங்கி ஆசீர்வதித்தார்.

இந்நிலையில் கோவிலூர் மடத்தின் நான்காவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த இராமசாமி ஞானதேசிகர் 1883ஆம் ஆண்டில் பரிபூரணம் அடைந்தார்கள். அப்பொழுது அவர்கள் கோவிலூர் ஆண்டவர் அருள்வாக்கின்படி, தமக்குப் பின் வீரன் வருவான் என்று குறிப்பால் உணர்த்தினார்கள்.

இதையறிந்த பொன்னம்பல சுவாமிகள் வீரப்பசுவாமிகளிடம் கோவிலூர் ஆதீனத்தைப் பாதுகாத்து வளர்க்க வீரமா முனிவராகிய தங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? என்று கேட்டுத் தலைமை ஏற்கக் கூறினார்கள். என் துறவு வாழ்க்கைக்கு இத்தலைமைப் பதவி ஒரு பொன் விலங்கு என்று மறுத்த வீரப்ப

சுவாமிகள், சிதம்பரத்தில் இருந்தால் தம்மைக் கட்டாயப்படுத்துவார்கள் என்று நினைத்து வளவனூரில் சண்முக ஞானதேசிகர் மடத்தில் ஒளிந்து கொண்டார்கள். தலைமைப்பதவி அவருக்காகத் தவம் செய்தது. பொன்னம்பல சுவாமிகள், தக்க பெரியவர்களை அனுப்பி, அவரைச் சிதம்பரத்துக்கு அழைத்து வந்தார்கள். கோவிலூர் ஆதீனத்தை கொண்டல்லவோ நாம் கடைத்தேறினோம். அதை நாம் பேணாமல் கைவிட்டால் நாம் கடைத்தேற நல்வழி கிடைக்குமா எனக் கேட்டு, வீரப்ப சுவாமிகளைச் சம்மதிக்கச் செய்து கோவிலூரில் பட்டம் கட்டி, பொன்னம்பல சுவாமிகள் புண்ணியம் பெற்றார்கள். இராமனுக்கு இலக்குவனாக இருந்து வீரப்ப சுவாமிகளுக்கு உயிர்த்துணைவராக விளங்கினார்கள்.

வீரப்பசுவாமிகள் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளாகப் பட்டமேற்றபின் கோவிலூரில் பல திருப்பணிகள் செய்தார்கள். **கைலாசக் கொட்டகை, பிரம்ம சபை, குருபூஜைக் கட்டு, நெற்களஞ்சியம், மலர் மண்டபம்** ஆகியவற்றைத் தமக்கே உரிய கலையுணர்வோடு கட்டினார்கள். **ஊருணியில் கற்படித்துறைகள்** கட்டி, அடியார்கள் வசிக்க ஆசிரமங்களும் கட்டினார்கள்.

சிருங்கேரி மடாதிபதி சச்சிதானந்த சிவாபிநவ நரசிம்ம பாரதி சுவாமிகள் இராமேசுவர யாத்தரை வந்து இராமநாதபுரத்தில் தங்கியிருந்த பொழுது, அவர்களைக் கோவிலூருக்கு அழைத்து வந்து ஒரு மாத காலம் தங்கச் செய்து சிறப்பாக உபசரித்தார்கள். அப்பொழுது அவர் சிருங்கேரி சாரதாம்பாள் ஆலயத்தைக் கருங்கற் பணியாக நீங்கள் ஆக்கித் தரவேண்டும், இது உங்கள் கடமை என்று கூற வீரப்பசுவாமிகளி நகரத்தார்களை வரவழைத்து ரூபாய் ஐம்பதாயிரம் சேர்த்து சிருங்கேரி மடத்தில் கொடுத்துக் கருங்கல் திருப்பணி செய்து திருக்குட நன்னீராட்டும் செய்தார்கள்.

இதனால் வீரப்ப சுவாமிகளுக்குச் சிருங்கேரி மடத்தில், சிருங்கேரி சுவாமிகளுக்குச் சமமாகப் பொற்பீடம் அளித்துப் பாராட்டினார்கள்.

வீரப்ப சுவாமிகள் கோவிலூரில் கொற்றவாளீசர் திருக்கோயிலைப் புதுப்பித்து தம்முடைய அறுபதாவது வயதில் **1908ல் திருக்குட நன்னீராட்டும்** செய்தார்கள்.

கோவிலூர்த் திருப்பணியை மேற்பார்வை செய்தபோது ஒரு நிகழ்ச்சி நடந்தது. அவர்கள் காலுக்கடியில் ஒரு கருநாகம் சீறிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்தவர்கள் வீரப்பசுவாமிகளிடம் ஐயா தங்கள் காலடியில் கருநாகம் படமெடுத்து ஆடுகிறது. தங்களைத் தீண்டிவிடும் போலத் தெரிகிறது. பாதுகாப்பாக இருங்கள் என்று கூறினார்கள். சுவாமிகள் ஆயுசு முடிந்தால் தீண்டும் என்றார்கள். பாம்பு தீண்டியது. அதன் ஆயுசு முடிந்தது. சுவாமிகள் எழுந்து வந்தார்கள். பாம்பு பிறவிப் பெருங்கடலில் கரையேறி விட்டது.

கோவிலூரைக் கலைமலிந்த ஊராக மாற்றிய வீரப்பசுவாமிகள் இணையற்ற செயல்திறன் உடையவர்கள். அவரை ராஜரிஷி என்று மக்கள் அழைத்தார்கள். அவர்கள் வேதாந்தப் பாடத்தைத் தம் மாணாக்கர்களுக்கு முறையாகக் கற்பித்தார்கள். கோவிலூர் மடத்தின் ஆறாவது பட்டம் ஏற்ற தேனிப்பட்டி அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளும் ஏழாவது பட்டம் ஏற்ற தேவகோட்டை மகாதேவ ஞான தேசிக சுவாமிகளும், வீரப்ப சுவாமிகளின் சீடர்களே ஆவர். இவர்கள் கோவிலூரில் வேதாந்த மணம் பரப்பியவர்கள். அண்ணாமலை ஞானதேசிகர் காலத்தில் 18 புராணங்களும் வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. தமிழ் இலக்கிய வரலாற்றில் கோவிலூர் மடம் தனியிடம் பெற்றது. வீரசேகர ஞானதேசிகர் காலத்தில் கோவிலூர் மடத்தில் தங்கிப் பாடம் கேட்ட அடியார் கூட்டம் மிகவும் அதிகமாக இருந்தது.

வீரப்ப சுவாமிகளின் மாணாக்கர்களில் சாதி இன வேறுபாடின்றிப் பல சான்றோர்கள் குறிப்பிடத்தக்க புகழ்பெற்றனர். மண்டபப்பட்டு வேங்கடாசலரெட்டியார், சித்தலக்கரை வெள்ளியங்கிரி முனிவர், மலையாளத்து நாராயண சுவாமிகள், வேதாரண்யம் வியாகரண பண்டித சிவானந்த சுவாமிகள், மதுரை பிரம்மானந்த சுவாமிகள், மடாதிபதி சோமசுந்தர சுவாமிகள், பசுபதி கோயில் சிதம்பர சுவாமிகள், மழபாடி சதாசிவ சுவாமிகள், வேப்பஞ்சேரி சூராவளி சொக்கலிங்க சுவாமிகள், பஞ்சநதிக்குளம் வைத்தியலிங்க சுவாமிகள், சின்னம ரெட்டிபட்டி அருணாசல சுவாமிகள், நாட்டரசன்கோட்டை மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள், திருப்பூவனம் காசிகானந்த ஞானாசார்ய சுவாமிகள், சூளமேடு வீர. சுப்பையா சுவாமிகள் முதலிய எண்ணற்ற துறவிகள், வீரப்ப சுவாமிகளிடம் பாடம் கேட்டார்கள். இவர்களில் பலர், தங்கள் ஊர்களில் மடங்களை நிறுவியவர்கள். இல்லறத்தில் இருந்தவர்களும் வீரப்ப சுவாமிகளிடம் வேதாந்தப் பாடம் கேட்கும் பேறுபெற்றார்கள். காரைக்குடி வேங்கடாசலய்யா, சுப்பிரமணியய்யா, குட்டை ஐயா, குமரப்பையா, மெய்யப்பய்யா, மாணிக்கய்யா, கோட்டையூர் அழகப்பையா, தேனிப்பட்டி அடைக்கப்பய்யா ஆகியோர் இல்லற அடியார்களாகப் புகழ்பெற்று விளங்கினார்கள்.

இவ்வளவு புகழ்பெற்ற வீரப்ப சுவாமிகள் விருப்பு வெறுப்புஇல்லாதவர். ஆனால் அவருக்குத் திடீரென்று கோபம் வந்துவிடும். அப்பொழுது அவர் கொடுக்கும் வரமும் சாபமும் பலித்துவிடும். இதனால் அவரைத் துர்வாசமுனிவர் என்பார்கள். இந்தக் கோபம் தீர என்ன வழி? என்று தம் நண்பர் சுப்பராய அய்யரிடம் கேட்டார் சுவாமிகள். பதினெட்டுப் புராணங்களையும் படித்த சுப்பராய அய்யர், துர்வாச முனிவர் தம்முடைய கோபத்தைப் போக்கிக் கொள்ளத் தவம் செய்து சாந்தம் பெற்ற திருத்தலம் தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப் பூண்டிக்கு அருகில் உள்ள

திருக்களர் என்ற தலம் என்று அந்த சுவாமிகளிடம் கூறினார். வீரப்ப சுவாமிகள் அங்கே சென்று பார்த்தார். அம்பல வாணர் முன்னால் துர்வாசர் சினமின்றி சிரித்தபடி இருப்பதைக் கண்டார். மனம் ஈடுபட்டது. ஆலயத் திருப்பணிக்கு வழி பிறந்தது. வீரப்ப சுவாமிகள் கட்டளையிட்டார்கள். இயல்பாகவே திருப்பணிக்கு அள்ளிக்கொடுக்கும் நகரத்தார்கள், சுவாமிகள் கட்டளையிட்டதால் இன்னும் அதிகமாகக் கொடுத்தார்க்ள.

நீருளார்கயல் வாவிசூழ்பொழில் நீண்டமாவயல் கண்டுமாமதில்
தேரினார் மறுகில் விழாமல்கு திருக்களருள்
ஊருளார் இடு பிச்சைபேணும் ஒருவனேஒளிர் செஞ்சடைம்மதி
ஆரநின்றவனே அடைந்தார்க் கருளாயே.

என்று திருஞானசம்பந்தர் பாடிய திருக்களர் ஆலயத்தின் திருப்பணியைத் தொடங்கிய வீரப்ப சுவாமிகள், தம் திருக்கரங்களால் உளிகொண்டு கொத்தித் தச்சுவேலை தொடங்கி அருளினார்கள். மூன்றாண்டுகளில் சுமார் நான்கு இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி நிறைவேறித் திருக்குட நன்னீராட்டும் (1911) செய்யப் பெற்றது. இதன் பிறகு வீரப்ப சுவாமிகள் கோபத்தை வீரபத்திரர் வாங்கிக் கொண்டு விட்டார். சுவாமிகள் அமைதியே வடிவமாக ஆலயத்தில் பணி செய்தார்.

திருக்களர் ஆலயத்தில் திருவிழா நடத்தத் தீர்மானித்த சுவாமிகள் அதற்காக மரத்தேர் செய்ய ஏற்பாடு செய்தார். தேரி செய்த பின் தேர்த் திருவிழாவுக்கு ஏற்பாடும் செய்யப்பெற்றது. மரத்தச்சர்கள் தேரை இழுக்குமுன் ஆட்டைப் பலி கொடுக்க வேண்டும் என்றார்கள். சுவாமிகள் மனம் ஒப்பவில்லை. நான் சொல்கிறபடி தேரை இழுங்கள், இடையூறு வந்தால் பார்த்தக் கொள்ளலாம் என்றார்கள். மக்கள்கூடித் தேர் இழுக்கத் தேர் கிளம்பயது. திருக்கோயிலே அசைந்து வருவதுபோலத் தெரிந்தது. எந்த வேற்றுமையுமின்றி ஊர்மக்கள் அனைவரும் கூடி

இழுத்தார்கள். சமுதாய ஒற்றுமைக்கு அடிப்படை அமைத்த தேர்த்திரவிழாவில், குலுங்கி வந்த திருத்தேர் திடீரென்று நின்றுவிட்டது. நகரவில்லை. எல்லா முயற்சிகளும் தோற்றுப் போய்விட்டன. எல்லோரும் சுவாமிகளிடம் வந்தார்கள். பரம்பரைப் பழக்கம் பலிகொடுப்பது. அதைச செய்யாததால் தடை ஏற்பட்டுவிட்டது. இனிமேலாவது பலிகொடுக்கச் சம்மதியுங்கள் என்றார்கள். கருணையே உருவான சுவாமிகள் நீங்கள் ஓர் ஆட்டைப் பலி கொடுத்தால், அழுவதற்கு ஆட்டுக்குட்டி இருக்கும். ஆட்டுக்குட்டியைப் பலியிட்டால் அழுவதற்கு ஆடு இருக்கும். ஓர் உயிர் போகும்பொழுது இன்னொரு உயிர் துக்கத்தை அனுபவிக்கும். இது இறைவன் திருவுள்ளத்துக்குச் சம்மதமாக இருக்காது. எனவே எல்லோரும் சென்று இறைவனிடம் முறையிடுங்கள். மறுபடியும் இழுத்துப் பாருங்கள். தேர் ஓடவில்லையானால் பலி கொடுங்கள். ஆட்டையோ கோழியையோ பலிகொடுக்க வேண்டாம். என்னைப் பலியிடுங்கள். ஈசனுக்குப் பலியாக இந்த வாழ்வு முடிந்து போகட்டும். எனக்காக அழவதற்கு அம்மாவும் இல்லை. குழந்தையும் இல்லை. தேரைச் செய்வதற்குக் காரணமான நானே அது ஓடுவதற்கும் பொறுப்பாகிறேன் என்றார். எல்லோருக்கும் மனம் உருகிவிட்டது. சுவாமிகள் பலியாகக் கூடாது என்ற எண்ணம் தீவிரமாகியது. பிரார்த்தனை செய்து தேரை இழுத்தார்கள். தேர் நகர்ந்து வேகமாக வந்து நிலை சேர்ந்தது. இறைவன் கருணையை நினைத்துக் கதறி அழுது கண்ணீர் விட்டார் சுவாமிகள். தேரில் கற்பூர ஆராதனை நிகழ்ந்தது. சுவாமிகள் கண்களில் அருவி பெருகியது. ஆனந்தமும் பக்தியும் கரை கடந்தன. சுவாமிகள் இந்த உணர்வோடு இறைவனிடம் இரண்டறக் கலந்துவிட்டார்கள். அரகர மகாதேவ என்ற மங்கல முழக்கத்துடன் அந்த ஆன்மாவைக் கொற்றவாளீசர் இணைத்துக் கொணடார். விரோதிகிருது (1911) ஆண்டு வைகாசி மாதம் 12ஆம் நாள் விசாகத் திருநாளில் இந்த அற்புதம் நிகழ்ந்தது.

அப்பொழுது சுவாமிகளுக்கு வயது 63. அறுபத்து மூவரின் பக்தியும் வைராக்கியமும் தொண்டும் சுவாமிகளிடம் இணைந்திருந்ததைக் காட்ட இந்நிகழ்ச்சி 63ஆம் ஆண்டில் நடந்ததோ என்னவோ, யார் அறிவார்? எல்லாச் செயல்களுக்கும் ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா? ஆண்டவர் இரத யாத்திரையைத் தொடர்ந்து, அடியவரின் இரத யாத்திரை நிகழ்ந்தது. திருக்களரில் சுவாமிகளுக்குச் சமாதி கோயில் கட்டப்பெற்றது. ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் குருபூசை நிகழ்ந்து வருகிறது. தேர் இழுத்த திருக்கரங்கள் சிவபெருமானின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு, ஆசி கூறி வருகின்றன. தம் உயிரையே பணயம் வைத்துத் தேர்த்திருவிழா நடத்திய வீரசேகரர் வரலாறு உண்மையிலேயே ஒரு வீர(ன்) வரலாறாகத் திகழ்கிறது. எனக்காக அழுவதற்கு அம்மாவும் இல்லை குழந்தைகளும் இல்லை என்று கூறிய சுவாமிகள் மறைந்தபோது பல்லாயிரக்கணக்கான அம்மாக்களும் குழந்தைகளும் சான்றோர்களும் கதறி அழுதார்கள். ஒரு வீட்டுக்காக வாழாமல் உலகத்துக்காக வாழும் உத்தமர்களுக்கு, அவர்களால் பயன்பெற்ற உலகம், கண்ணீர் விடுவதைத் தவிர, வேறென்ன கைம்மாறு காட்டமுடியும்?

தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதீனத்தின் வேதாந்தப் பரம்பரையில் பனிரெண்டாவது பட்டத்தில் அருளாட்சி செய்யும் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் உலக வரைபடத்தில் கோவிலூருக்கு உயர்ந்த இடத்தைப் பெற்றுத்தந்த உத்தமராவார். வேதாந்தத்தை யாவருக்கும் பொதுவுடைமையாக்கிய புதுமைச் சித்தரான கோவிலூர் ஆண்டவரின் மகன் வழியில் ஆறாவது தலைமுறைப் பேரனான நாச்சியப்ப சுவாமிகள் உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய பெருமான் புகழை உலகெலாம் பரப்பும்

உறுதிபூண்டவர். வேகமும், விவேகமும் கொண்ட சுவாமிகளின் வாழ்க்கை வியக்கத்தக்க நிகழ்ச்சிகளின் தொகுப்பாக விளங்குகிறது.

காரைக்குடிக்கு அருகில் உள்ள மானகிரி என்ற சிற்றூரில் 29.05.1923ல் கோவிலூர் ஆண்டவரின் குடும்பத்தில் மகன் வழியில் ஆறாவது தலைமுறையில் பேரனாகத் தோன்றினார் நாச்சியப்பர். மானகிரியில் திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் காரைக்குடியில் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப்பள்ளியிலும் கல்வி கற்றார். அடையாறு பெசண்ட் நினைவுப் பள்ளியில் படித்துப் பள்ளி இறுதித் தேர்வை முடித்து, மாநிலக் கல்லூரியில் இண்டர்மீடியட் படிப்பை முடித்தார். அப்பொழுது கிடைத்த அறிவியல் அறிவு அவர் வாழ்க்கை சிறக்க உதவி செய்தது. உலகம் போற்றும் கலாக்ஷேத்ரா நிறுவனத்தை 1935ல் தொடங்கி நடனக் கலைக்கும் இசைக் கலைக்கும் பெருந்தொண்டாற்றிப் பாரத நாட்டின் கலை வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற அன்னை ருக்மணி அருண்டேல் அவர்களின் பேராதரவால் சென்னையில் பள்ளிப் படிப்பையும், கல்லூரிப் படிப்பையும் பெற்ற நாச்சியப்பர் மேலைநாடுகளுக்குச் சென்று கற்று அச்சுக்கலையிலும் நிழற்படக் கலையிலும் நிகரற்றவரானார். 1957இல் நியூயார்க்கில் நிழற்படக் கலையைக் கற்று 1963இல் உலகப் புகழ்பெற்று கோடாக் கம்பெனியில் பணியாற்றினார். ஜெர்மனியிலும் லண்டனிலும் நிழற்பட நுட்பங்களைக் கற்றார். லண்டன், நியூயார்க், டெட்ராய்ட் ஆகிய நகரங்களில் மேடைக்கலை - அரங்க ஒளியமைப்பு ஆகியவை கற்றுத் தேர்ந்தார்.

1944இல் கலாக்ஷேத்ராவில் தம்மை வளர்த்த ருக்மணி அருண்டேல் அம்மையாரிடம் நேர்முக உதவியாளராகச் சேர்ந்தார். 1946இல் கலாக்ஷேத்ரா பதிப்பகம் (**Kalakshetra Publications**) தொடங்கி மரியா மாண்டிச்சோரி அம்மையாரின் குழந்தைக்கல்வித்

திட்டத்துக்கான புத்தகங்களை வெளியிடத் தொடங்கினார். 1947இல் காலக்ஷேத்ராவில் அரங்கநிர்வாகப் பொறுப்பேற்றார். ஒளியமைப்பில் புதுமை செய்து புகழ்பெற்றார். 1953இல் தம்முடைய 30ஆவது வயதில் வண்ணப் புகைப்படங்கள் சம்பந்தப்பட்ட பெரிய சோதனைச்சாலையை உருவாக்கிப் புகைப்படக் கலையின் மூலம் விளம்பரக் கலையும் வளர உதவினார். 1955 முதல் 1972 முடிய கலாக்ஷேத்ராவின் நிர்வாகக் குழுவில் பெரும்பணி ஆற்றினார். குவாலியரில் குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகம், தில்லியில் குமாரசம்பவம், அயல்நாடுகளில் பரதநாட்டியம் என்று உலகம் முழுவதும் கலைப்பணியாற்றச் சென்ற ருக்மணி அருண்டேல் அவர்கள் குழுவுடன் மேடை நிர்வாகியாகவும், பயண அமைப்பாளராகவும், ஒளியமைப்பு வல்லுநராகவும் சென்று பணியாற்றினார். கிழக்கு ஐரோப்பா, இந்தோனேஷியா, கம்போடியா, ஜாவா, பெல்ஜியம்,இத்தாலி, சுவிட்சர்லாந்து, ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின் என்று உலகநாடுகளில் இவர் கால்படாத இடமில்லை என்று கூறமாறு காலக்ஷேத்திரப் பணிசெய்தார். 1979 முதல் 1994 முடிய நியூயார்க்கில், அச்சுக்கலை நிழற்படக்கலை ஆகியவற்றில் வல்லுநர்களாகத் திகழ்ந்த திறமையாளர்களுடன் இணைந்து பணியாற்றி உலகப் புகழ் பெற்றார். கலாக்ஷேத்ராவின் மதிப்பு மிக்க தூண்களில் குறிப்பிடத்தக்கவராக விளங்கி, அங்கே மாணவராகவும், உதவியாளராகவும், கலைஞராகவும், அச்சக உரிமையாளராகவும், மேடை நிர்வாகியாகவும், அறக்கட்டளைச் செயலராகவும், ஒல்லும் வாறெல்லாம் அறவினை ஓவாது செல்லும் வாறெல்லாம் செயல்வல்லவராகத் திகழ்ந்து, அந்த நிறுவனத்தின் புகழ்க்கொடி பட்டொளி வீசிப்பறக்கச் செய்தார்.

இவ்வாறு சேர்த்த திறமையும் அதிகம். சேர்த்த செல்வமும் அதிகம். தேடிவந்த புகழும் அதிகம் என்று வாழ்ந்து வந்த சித. நாச்சியப்பரை தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிகராக்கிக் கோவிலூர் ஆதீனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று

அன்னை திருநெல்லையம்மை திருவுள்ளம் கொண்டாள். இது அவருடைய வாழ்க்கையில் இரண்டாம் பாகம். பொன்னைக் கொடுத்த இறைவன் மெய்ப்பொருளும் கொடுக்க நினைத்தான். இந்த ஞான வாழ்க்கைக்குப் பன்றிமலை சுவாமிகள் குறிப்புக் காட்டினார்.

1975ஆம் ஆண்டில் ஆன்மிகச் செல்வர் டி.எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் நாச்சியப்பரைக் காஞ்சி மாமுனிவரிடம் அறிமுகப்படுத்தினார். காஞ்சி முனிவர், "நீ நகரத்தார் இல்லையோ! கோவிலூரரார் குடும்பம் என்கிறாய். கோவிலூர் மடத்துடன் சம்பந்தம் வைத்துக்கொள்" என்றார். அந்த வாக்கு இருபதாண்டுகளில் பலித்தது.

கல்கியின் திருமகளார் ஆனந்தி ராமச்சந்திரன் அவர்கள் கூறியதுபோல விதி மாற்றியமைக்கப்பட்டுவிட்டது. கோபாலகிருஷ்ண பாரதி பாடிய படி

விதியின் எழுத்தைக் கிழித்தாச்சு – முன்னம்
விட்டகுறை வந்து தொட்டாச்சு

அன்று நந்தனுக்கு நடந்தது இன்று நாச்சியப்பருக்கு நடந்துவிட்டது. அதனால் தானே நாச்சியப்பசுவாமிகள் அமெரிக்காவில் நடராசருக்குக் கோயில் கட்ட எண்ணினார்?

மக்கள் பிணிதீர்க்கும் இயற்கை மருத்துவராகவும் சில காலம் பணியாற்றிய நாச்சியப்பர் மனப்பிணி தீர்க்கும் மருத்துவரானார்.

ஆண்டவர் மரபில் பிறந்த புண்ணியத்தால் மீண்டும் பிரும்ம சபையில் ஆண்டவரே வந்து உட்காரந்து விட்டார்.

1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் நாள் சிதம்பரம் செட்டியார் சீதாலெட்சுமி ஆச்சியின் திருமகன், ஆண்டவரின் அருட்பேரனாக, வேதாந்த பீடத்தில் வித்தகத் தலைமையேற்று தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிகராக, மக்கள் போற்ற மனத்துறவும் தவத்துறவும் கொண்டார். கோவிலூர் மடத்தின் பொற்காலம் கொற்றவாளீசரால் எழுதப்பட்டு விட்டது.

"எதிலும் விருப்பமின்றி எவரிடத்தும் பகையில்லாமல், சமநோக்குடன் இருந்துவரும் மகாத்மாவின் பின்னே, அவருடைய பாதத்தின் தூசி என்மீது விழுந்து நான் உய்யமாட்டேனா என்ற ஆவலில் நான் போய்க்கொண்டேயிருக்கிறேன்" என்று பாகவதத்தில் கண்ணன் கூறியபடி பாரதநாட்டுக்கு இன்னொரு துறவி - தமிழகத்துக்கு ஒரு விவேகானந்தர் - கிடைத்துவிட்டார். சநாதன தரும உலகப் பல்கலைக் கழகம் தமிழகத்தில் நிறுவப்பட வேண்டும் என்று இறைவன் தீர்மானித்துவிட்டான். கோவிலூர் ஆண்டவர் நிகர்நிலைப் பல்கலைக் கழகம் **(Koviloor Andavar Deemed University)** தமிழகக் கோயிற்கலைகளையும் பண்பாட்டையும் சிவநெறியையும் செந்தமிழையும் வளர்க்கும் வகையில் தோன்ற இருக்கிறது.

கோவிலூர் ஆதீனம் குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் நாச்சியப்ப ஞானதேசிகர் தெளிவான சிந்தனையோடும் தொலைநோக்குடனும் திட்டங்களை வகுத்துச் செய்துவருகிறார்கள்.

தாம் பட்டத்திற்கு வந்ததும் முதற் காரியமாக, குழந்தைகள் பள்ளி தொடங்கினார்கள். சிறு வயது முதலே குழந்தைகள் நல்ல கல்வி கற்க வேண்டும். குழந்தைகளே சமுதாயத்தின் பெருமைக்குரிய சொத்து - மூலதனம் - தூண்கள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையும் குழந்தைகள் பால் பேரன்பும் கொண்டவர்கள். ஆதலால் கல்விப் பணியைத் தலையாய பணியாகக் கருதுகிறார்கள். ஆகவேதான் இளைஞர்கள் உயர் கல்வி பெற்று உயர்ந்தால் சமூகமும் தானாக உயர்ந்து நன்னிலை அடையும் என்பதனால் பெரும் தொகை ஒதுக்கி உதவுகிறார்கள்.

எந்த நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் அது சார்ந்து நிற்கும் மரபுகளும் கோவில்களும்தான் அடிப்படை. எல்லா அறங்களும் கலைகளும் கோவிலிற்தான் நடத்தப்பட்டன. எனவே கோவிலைக் காப்பாற்ற வேண்டும். அது சார்ந்த கலைகளைக் காப்பாற்றவேண்டும். கோவில்கள் நடைபெற வேண்டும் எனில் அதற்குரிய சிப்பந்திகளும் சடங்குகளை நிறைவேற்றுகிற கலைஞர்களும் தேவை என்பதால், நசிந்து வரும் அனைத்துக்

கலைகட்கும் புத்துயிர் ஊட்டி வளர்ப்பதற்காகவே கோவிலூரில் கலைகளுக்கான கல்லூரிகள், பெரும் பொருட் செலவில் நடத்திவருகிறார்கள். அவற்றை ஒருங்கிணைத்து ஒரு பல்கலைக்கழகமாக நிறுவவேண்டும் என்ற கனவும் சாமிகட்கு உண்டு. அது நிறைவேறும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

உணவின்றி யாரும் துயர்படக்கூடாது என்ற மனித நேய உள்ளத்தால் ஆதரவில்லாத அனைவர்க்கும் உதவி வருகிறார்கள். நமது பெண்கள் திருமணம் ஆகாமல் இருந்தால் சமுதாயமே நசிந்துவிடும் என்ற உணர்வால் பெண்கள் திருமணத்திற்கு தாராளமாக உதவுகிறார்கள்.

கோவிலூர் சார்ந்த எல்லா மடங்களும் தற்சார்புடையதாக, சொந்தக்காலில் நிற்கக் கூடியதாக காலகாலத்திற்கும் வளர்ந்து உயரக் கூடிய நிலையில் இருக்கவேண்டும் என்ற உறுதியான எண்ணத்தினால் எல்லா மடங்களிலும் திருமண மண்டபமோ, கடைகளோ கட்டி நிரந்தர வருவாய்க்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

எல்லா மடங்கட்கும் வருகின்ற அன்பர்கள் தங்கித் தரிசிக்கவும், உணவு உண்ணவும் வசதியான தங்கும் அறைகள் கட்டி எல்லா மடங்களிலும் அன்னதானம் நடைபெறவும் ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

கோவிலூரை ஒரு கல்வி நகரமாக ஆக்கப் பெரிதும் விருப்பம் கொண்டுள்ளார்கள். செய்யும் எதனையும் செம்மையாகச் செய்ய வேண்டும் என்பதில் மிக உறுதியாக உள்ளவர்கள் ஆதலால், தரமான கல்வி தந்து இளைஞர்கட்கு ஏற்றம் தரவேண்டும் என்பதில் மிகவும் குறியாக உள்ளார்கள். அவர்கள் கனவுகள் மிகவும் பெரியவை, சிறந்தவை. அவையாவும் நிறைவேற ஆண்டவர் அருள்பாலிக்க வேண்டும்.

சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞான தேசிய சுவாமிகள் பொருள் உதவியால் நடைபெற்று வரும் பணிகள் தொடர்ந்து தரப்பட்டுள்ளன.

கோயில் திருப்பணிகள்

குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் பட்டத்திற்கு வந்தபின் அவர்களுடைய பொருள் உதவியாலும் அருள் ஆசியாலும் ஏராளமான அறப்பணிகள் எல்லாத்துறைகளிலும் செய்யப்பட்டுள்ளன.

அவற்றுள் முதலிற் கோயிற் திருப்பணிகளைப் பார்ப்போம்.

திருவண்ணாமலை – ஈசான்ய மடம்

1. 1997 ஆம் ஆண்டு டிசம்பர் 4ம் தேதி திருவண்ணாமலை – ஈசான்ய மடத்தில் உள்ள ஈசான்ய ஞானதேசிக சுவாமிகளின் ஜீவ சமாதியைப் பழுதுநீக்கி வண்ணமுறப் புதுப்பித்து குடமுழுக்கு விழா நடைபெற்றது. தற்போது ஈசான்ய ஞானதேசிகரின் சமாதி முன்னுள்ள முன்மண்டபத்தை கான்கிரிட் தளம் அமைத்து (தற்போது ஆஸ்பெஸ்டாஸ் கூரை உள்ளது) 2011இல் மறு கும்பாபிஷேகம் நடத்துமாறு அருள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

பொருள்வைத்த சேரி – கோவிலூர் ஆதீனம் (கோ.ஆ.பொ.மடம்)

2. பொருள்வைத்தசேரி மடம் (கோ.ஆ.பொ.மடம்) 2002ம் ஆண்டு ஜுன் மாதம் 5ம் தேதி அருள்மிகு சௌந்தரவல்லி உடனாய சுவர்ணபுரீஸ்வரர் திருக்கோயில் ஏறக்குறைய ரூபாய் பதினைந்து லட்சம் செலவில் திருப்பணி செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

3. அதே நன்னாளில் ஸ்ரீமத் உகந்தலிங்க ஞானதேசிக சுவாமிகளின் திருக்கோயிற் திருப்பணி செய்யப்பெற்றது. புதிய முன்மண்டபமும் கட்டப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருக்களர் – கோவிலூர் ஆதீனம், வீரசேகர ஞான தேசிகர் மடாலயம் (கோ.ஆ.வீர.மடம்)

4. திருக்களர் மடத்தின் பொறுப்பில் உள்ளதும், நம்முடைய கிராமமுமான மருதவனம் அருள்மிகு பாலாம்பாள் உடனாய மருதவனேஸ்வரர் திருக்கோவில் ஏறக்குறைய பத்து லட்சம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்பெற்று புதிய துர்க்கை சந்நிதியும் உருவாக்கப்பெற்று 26.01.2004இல் கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நடைபெற்றது.

5. 2004 மே மாதம் 24ம் தேதி கோவிலூர் ஆதீனம் ஐந்தாவது பட்டம் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின் அதிஷ்டானக் கோவில் சுமார் 5 லட்சம் செலவில் திருப்பணி செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

சிதம்பரம் – கோவிலூர் ஆதீனம், சிதம்பர சுவாமி மடம் (கோ.சித.மடம்)

6. 2005ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் தேதி ஆறு லட்சம் செலவில் திருப்பணி செய்யப்பெற்றுச் சுவர்ச் சித்திரங்கள் புதுப்பிக்கப்பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மேட்டுப்பாளையம் சபாபதி சுவாமிகள் மடம்

7. திருவண்ணாமலைக்கருகில் உள்ள மேட்டுப் பாளையத்தில் ஸ்ரீமத் சபாபதி சுவாமிகளின் அதிஷ்டானம் திருப்பணி செய்யப்பெற்று முன்மண்டபம் கான்கிரிட் கட்டிடமாகக் கட்டப்பெற்று – 08.06.2006 அன்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

8. எறும்பூர் (கோ.சித.மடம்) :

ஸ்ரீமத் தத்துவராய சுவாமிகளின் அதிஷ்டானம் மீண்டும் கற்திருப்பணியாக ஏறக்குறைய 28 லட்சம் செலவில் புதிய இராஜகோபுரத்துடன் திருப்பணி செய்யப் பெற்று 4.5.2007 அன்று மிக விமரிசையாக பூஜ்யஸ்ரீ சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் முன்னிலையில் நம் குருமகா சந்நிதானம் தலைமையில் சிதம்பரம் தீட்சிதர்களால் கும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றது.

ஸ்ரீமத் தத்துவராய சுவாமிகளின் வேதாந்த நூல்களின் பெருமை, முக்கியத்துவம் கருதி சொற்பொழிவு, இன்னிசைக் கச்சேரிகளுடன் மிகமிக விமர்சையாக கும்பாபிஷேகம் நடத்தப் பெற்றது.

9. திருக்களர் பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோவில் :

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற திருத்தலமான திருக்களர் கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு அமிர்தவல்லி உடனாய பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோவில் திருப்பணி நடந்து, நம் சுவாமிகளின் பொருள் உதவியால் பெரும்பாலான திருப்பணிகளும், கோயம்புத்தூர் திருப்பணிச் செம்மல் உயர்திரு. வசந்தகுமார் பொருள் உதவியால் ராஜகோபுரத் திருப்பணியும், இந்து சமய அறநிலைத்துறை சார்பாக சில திருப்பணிகளும் நடைபெற்றது. ஏறக்குறைய ரூ. 20 லட்சம் செலவில் சர்வதாரி ஆண்டு ஆனி மாதம் 30ம் தேதிக்கு (2008ம் ஆண்டு ஜூலை மாதம் 14ம் தேதி) குடமுழுக்கு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருக்குட நீராட்டு விழா ஆறு கால யாக பூஜையுடன், கருத்தரங்கு, பாட்டு, நடனம், கதாகாலக்ஷேபம் ஆகிய சகல விஷேசங்களுடன் நடைபெற்றது.

திருப்பனந்தாள், திருவாடுதுறை, தருமபுரம், காமாட்சிபுரம் ஆதீனங்களும், ஏராளமான துறவிகளும் கலந்து கொண்டனர். அதுவரை திருக்களர் கிராமமே கண்டிராத வகையில் மக்கள் கூட்டம் நன்னீராட்டு விழா வைபவத்தைக் கண்டு களித்தது.

10. கோவிலூர் ஆண்டவர் – அதிஷ்டானக் கோவில் :

கோவிலூர் ஆண்டவர் அதிஷ்டானக் கோவில் சிறப்பாகத் திருப்பணி செய்யப்பட்டு விக்ருதி ஆண்டு ஆனித் திங்கள் 9ம் நாள் (23.06 .2010) கோவிலூர் ஆண்டவர் கும்பாபிஷேகம் வேதாந்திகளும், சன்னியாசிகளும், பொது மக்களும் பெருந்திரளாக கலந்து கொள்ள வெகு விமரிசையாக நடைபெற்றது.

11. கோவிலூர் – திருநெல்லையுடனாய கொற்றவாளீஸ்வரர் திருக்கோயில்

கோவிலூர் சுவாமிகள் ஆதரவில் மிகுந்த பொருட் செலவில் திருப்பணி செய்யப் பெற்றது. கோபுரங்கள், விமானங்கள் அனைத்தும் புதிதாக பஞ்சவர்ணம் தீட்டப் பெற்றது. சிறப்பாகத் திருப்பணி செய்யப் பெற்றது. மேலும் கோவிலுக்குள்ளே சிற்பங்களை மறைத்த வர்ணங்களைஊண அகற்றித் திருப்பணி செய்யப் பெற்றது.

ஆனித் திங்கள் 10ம் நாள் (24.06.2010) அருள்மிகு திருநெல்லையுடனாய கொற்றவாளீஸ்வரர் திருக்குட நன்னீராட்டு விழாவும் பிள்ளையார்பட்டி சிவத்திரு. பிச்சைக் குருக்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அடுத்து வரும் திருப்பணிகள்

- மானாமதுரை நாராயணசுவாமி மடம் முழுவதுமாக இடிக்கப்பட்டு முன்புறம் கடைகளும், பின்புறம் மடத்திற்கான கட்டிடங்களும் கட்டப்பட்டு வருகின்றது. இத்திருப்பணி நிறைவுபெற்று சமாதிக் திருக்கோயில் சீர்செய்யப்படும் 2011ம் ஆண்டு குடமுழுக்கு விழா நடைபெறவிருக்கின்றது.
- வளவனூர் சண்முக சுவாமிகளின் மடத்திலுள்ள சண்முக சாமி சமாதிக்கோவிலையும் மற்ற சமாதிக் கோவில்களையும் புதுப்பித்து கூடவே திருமடத்தை சீர் செய்து 2011 - 2012ல் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

- அடுத்த சுற்றாக மீண்டும் ஈசான்ய ஞானதேசிகர் அதிஷ்டான முன் மண்டபத்தை சீர் செய்து, வரும் தை மாதம் குடமுழுக்கு செய்யப்படும்.
- திருக்களர் - புதிய தேர் ஒன்று செய்து வெள்ளோட்டம் பார்க்கப்படும். சித்திரை மாதம் பிரம்மோத்சவம் மீண்டும் நடைபெறும்.

இறைப்பணி

பெரியபுராணம் பாடும் நாயன்மார்கள் அறுபத்துமூவரில் ஐவர் நகரத்தார்கள் மரபைச் சேர்ந்தவர்கள். இயற்பகைநாயனார் மூர்த்தி நாயனார், காரைக்காலம்மையார், அமர்நீதி நாயனார் ஆகியோர் வணிகப்பெருமக்கள். இவர்கள் முக்தி அமைந்த ஊர்களில் ஆண்டுதோறும் வழிபாடு செய்து அன்னதானம் செய்ய வைப்புத் தொகை வைத்து, சுவாமிகள் ஏற்பாடு செய்து இப்பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

திருமுறைப்பணி

பன்னிரு திருமுறைகளையும் வளர்க்கத் தேவாரப் பாடசாலைகள் வைத்த நகரத்தார்கள், நான்கு வேதங்களையும் முறையாகக் கற்றுத்தர வேதபாடசாலைகளையும் அமைத்தார்கள் நகரத்தார்களின் வேதபாடசாலையில் பயின்றவர்கள் இன்று புகழ் மிக்க பீடாதிபதிகளாகத் திகழ்கிறார்கள். இந்த வழியில் தேவ நெறி தழைத்தோங்க, மதுரை, மயிலாடுதுறை, காரைக்கால் போன்ற 9 ஊர்களில் வேத பாடசாலையிகளில் வேதம் கற்றுக் கொள்ளும் தேவவித்துக்களுக்கு உதவித்தொகை, மாதந்தோறும் சுமார் ஒரு லட்சம் ரூபாய், கோவிலூர் மடத்திலிருந்து, நாச்சியப்ப சுவாமிகளால் வழங்கப்பெற்று வருகிறது.

சமூகப்பணி

மக்கள் பயன்பெற இலவச சித்த மருத்துவமனை கோவிலூரில் தொடங்கப்பெற்றள்ளது. நகரத்தார் நலவாழ்வு அறநிலை என்ற அமைப்பைத் துவங்கி அதன் மூலமாக ஆண்டு

10. கோவிலூர் ஆண்டவர் – அதிஷ்டானக் கோவில் :

கோவிலூர் ஆண்டவர் அதிஷ்டானக் கோவில் சிறப்பாகத் திருப்பணி செய்யப்பட்டு விக்ருதி ஆண்டு ஆனித் திங்கள் 9ம் நாள் (23.06 .2010) கோவிலூர் ஆண்டவர் கும்பாபிஷேகம் வேதாந்திகளும், சன்னியாசிகளும், பொது மக்களும் பெருந்திரளாக கலந்து கொள்ள வெகு விமரிசையாக நடைபெற்றது.

11. கோவிலூர் – திருநெல்லையுடனாய கொற்றவாளீஸ்வரர் திருக்கோயில்

கோவிலூர் சுவாமிகள் ஆதரவில் மிகுந்த பொருட் செலவில் திருப்பணி செய்யப் பெற்றது. கோபுரங்கள், விமானங்கள் அனைத்தும் புதிதாக பஞ்சவர்ணம் தீட்டப் பெற்றது. சிறப்பாகத் திருப்பணி செய்யப் பெற்றது. மேலும் கோவிலுக்குள்ளே சிற்பங்களை மறைத்த வர்ணங்களைஊண அகற்றித் திருப்பணி செய்யப் பெற்றது.

ஆனித் திங்கள் 10ம் நாள் (24.06.2010) அருள்மிகு திருநெல்லையுடனாய கொற்றவாளீஸ்வரர் திருக்குட நன்னீராட்டு விழாவும் பிள்ளையார்பட்டி சிவத்திரு. பிச்சைக் குருக்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அடுத்து வரும் திருப்பணிகள்

- மானாமதுரை நாராயணசுவாமி மடம் முழுவதுமாக இடிக்கப்பட்டு முன்புறம் கடைகளும், பின்புறம் மடத்திற்கான கட்டிடங்களும் கட்டப்பட்டு வருகின்றது. இத்திருப்பணி நிறைவுபெற்று சமாதிக் திருக்கோயில் சீர்செய்யப்படும் 2011ம் ஆண்டு குடமுழுக்கு விழா நடைபெறவிருக்கின்றது.
- வளவனூர் சண்முக சுவாமிகளின் மடத்திலுள்ள சண்முக சாமி சமாதிக்கோவிலையும் மற்ற சமாதிக் கோவில்களையும் புதுப்பித்து கூடவே திருமடத்தை சீர் செய்து 2011 - 2012ல் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

- அடுத்த சுற்றாக மீண்டும் ஈசான்ய ஞானதேசிகர் அதிஷ்டான முன் மண்டபத்தை சீர் செய்து, வரும் தை மாதம் குடமுழுக்கு செய்யப்படும்.
- திருக்களர் - புதிய தேர் ஒன்று செய்து வெள்ளோட்டம் பார்க்கப்படும். சித்திரை மாதம் பிரம்மோத்சவம் மீண்டும் நடைபெறும்.

இறைப்பணி

பெரியபுராணம் பாடும் நாயன்மார்கள் அறுபத்துமூவரில் ஐவர் நகரத்தார்கள் மரபைச் சேர்ந்தவர்கள். இயற்பகைநாயனார் மூர்த்தி நாயனார், காரைக்காலம்மையார், அமர்நீதி நாயனார் ஆகியோர் வணிகப்பெருமக்கள். இவர்கள் முக்தி அமைந்த ஊர்களில் ஆண்டுதோறும் வழிபாடு செய்து அன்னதானம் செய்ய வைப்புத் தொகை வைத்து, சுவாமிகள் ஏற்பாடு செய்து இப்பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

திருமுறைப்பணி

பன்னிரு திருமுறைகளையும் வளர்க்கத் தேவாரப் பாடசாலைகள் வைத்த நகரத்தார்கள், நான்கு வேதங்களையும் முறையாகக் கற்றுத்தர வேதபாடசாலைகளையும் அமைத்தார்கள் நகரத்தார்களின் வேதபாடசாலையில் பயின்றவர்கள் இன்று புகழ் மிக்க பீடாதிபதிகளாகத் திகழ்கிறார்கள். இந்த வழியில் தேவ நெறி தழைத்தோங்க, மதுரை, மயிலாடுதுறை, காரைக்கால் போன்ற 9 ஊர்களில் வேத பாடசாலையிகளில் வேதம் கற்றுக் கொள்ளும் தேவவித்துக்களுக்கு உதவித்தொகை, மாதந்தோறும் சுமார் ஒரு லட்சம் ரூபாய், கோவிலூர் மடத்திலிருந்து, நாச்சியப்ப சுவாமிகளால் வழங்கப்பெற்று வருகிறது.

சமூகப்பணி

மக்கள் பயன்பெற இலவச சித்த மருத்துவமனை கோவிலூரில் தொடங்கப்பெற்றள்ளது. நகரத்தார் நலவாழ்வு அறநிலை என்ற அமைப்பைத் துவங்கி அதன் மூலமாக ஆண்டு

தோறும் சுமார் 60 இலட்ச ரூபாய் வரை வட்டி இல்லாக் கடனாக கடந்த எட்டு ஆண்டுகளாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 2000 மாணவர்கட்கு மேலாக பயனடைந்துள்ளார்கள். முதியோர்க்கு, முதியோர் உதவித் தொகையாக 1995ல் இருந்து மாதம் ரூ.350/- வீதம் 1000 நபர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதை இனி வரும் வருடங்களில் ரூ.500 ஆக வழங்க சந்நிதானம் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் திருமண உதவிக்காக நகரத்தார் பெண்கள் நலவாழ்வு அறநிலை தொடங்கப்பெற்று மாதந்தோறும் 25 பெண்களுக்கு ரூ.5000/- வீதம் ஒவ்வொரு மாதமும் ரூ.1,25,000/- திருமண உதவித்தொகை 2002 முதல் வழங்கப்படுகின்றது.

இலக்கியப்பணி

இவ்வாறு கல்விப்பணி, இறைப்பணி, சமூகப்பணி, வேதாந்தப்பணி, திருமுறைப்பணி ஆகியவற்றைச் செய்யும் சுவாமிகள், இலக்கியங்களை பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் வெளியிட டாக்டர் சுப. அண்ணாமலை, டாக்டர் தமிழண்ணல் ஆகியோர் தலைமை உரையாளராகக் கொண்டு மக்கள் பதிப்பாக சங்க இலக்கிய நூல்களை இந்தியாவின் மாமனிதர் டாக்டர். ஜெ. அப்துல்கலாம் அவர்களின் திருக்கரத்தால் வெளியிட்டுள்ளார்கள். மாண்டிஸோரி புத்தகங்களை வெளியிட்டு அகில உலகம் முழுவதும் மாண்டிஸோரிக் கல்வி முறையைப் பரப்பி வருகிறார்கள்.

திருமந்திரத்தை செம்பதிப்பாக ஏடுகளைச் சரிபார்த்து பாடபேதம் நீக்கி - டாக்டர். சுப. அண்ணாமலை அவர்களைக் கொண்டு வெளியிட்டுள்ளார்கள். நாயன்மார்கள் அறுபத்துமூவர் வரலாறு, ஆழ்வார்கள் வரலாறு, திருவிளையாடற்புராணம்,

முதலியவைகளை குழந்தைகளுக்காக ஆங்கிலத்தில் பதிப்பித்து வெளியிட்டார்கள்.

1998 ல் சிலப்பதிகாரக் கருத்தரங்கம்

2003ல் திருக்குறள் கருத்தரங்கம்

2009ல் தொல்காப்பியர் கால ஆய்வுக் கருத்தரங்கு ஆகிய இலக்கியப் பேரவைகள் நடத்தியுள்ளார்கள்.

கல்விப்பணி

கோவிலூர் ஆதீனம் ஏறக்குறைய கடந்த 200 ஆண்டுகளாக வேதாந்த - அத்வைத தத்துவத்தை (Non - Dual Philosophy) எல்லா ஆர்வலர்களுக்கும் சாதி, மத பேதமின்றி கற்பதற்கு அதுவும் தமிழிலேயே கற்பதற்கு வசதியாக 16 நூல்களாகப் பிரதான பாடத் திட்டமாக வகுத்து நடத்தி வந்திருக்கிறார்கள். இந்தப் பாரம்பரியம் இன்றுவரை தொடர்ந்து நடந்து வருகிறது. "கோவிலூர் மரபு வேதாந்தம்" இன்றும் தென்னகம் முழுவதும் பரவியுள்ளது.

(A1) தொடக்கப்பள்ளி :

1995ல் இப்போதைய ஆதீனகர்த்தர் சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் பதவியேற்ற அன்றே மாண்டிஸோரி பள்ளியும், தொடக்கப்பள்ளியும் தொடங்கி வைத்தார்கள். முதல் மாணவியாக சேர்ந்த குழந்தையின் பெயர் "திருநெல்லை". திருநெல்லையே ஆசீர்வதித்ததுபோல் தொடங்கப்பெற்ற பள்ளி இன்று படிப்படியாக வளர்ச்சி பெற்று 500 மாணவர்களுக்குமேல் தரமான கல்வியை வழங்கி வருகிறது.

கோவில் சார்ந்த கலைகள்

(A2) கோயிற்கலைகள் :

சுவாமிகள் தமிழகத்தின் பாரம்பரியமான கலைகள் காலப்போக்கில் அழிந்து வருவதையும், கலைஞர்கள் நலிந்துவருவதையும் தடுப்பதற்காக வேண்டி இளம்

மாணவர்களுக்கு இலவசமாக இந்தக் கலைகளை கற்பிக்க விரும்பி நாதஸ்வரம், தவில், வேத ஆகமம், கோயில் நிர்மாணம், கற்சிற்பம், ஐம்பொன் சிற்பம், தேர்வாகனம் ஆகிய கலைகளை முற்றிலும் இலவசமாக உண்டி, உறைவிடம், உடைகள் தந்து சொல்லித் தருகின்றார்கள்.

தொடர்ந்து 15 ஆண்டுகளாக இந்தக் கலைகளில் தேர்ச்சிப் பெற்ற மாணவர்கள் ஏராளமானோர் இந்திய தேசம் முழுவதும் பரவி பணியாற்றி வருகிறார்கள். இத்துறையில் நல்ல பெயரும், வருமானமும் கிடைக்கின்றது. இத்துறையில் கல்வி பயில மாணவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நிறைய மாணவர்கள் சேருகின்ற பட்சத்தில் மற்ற கிளை மடங்களிலும் இந்தக் கலை வகுப்புகளை நடத்த தயாராக இருக்கின்றோம்.

மரபு வழிக் கல்வி

இந்தப் பாரம்பரியக் கலைகள் சார்ந்த கல்விகளுடனே மரபு வழிக் கல்லூரிகள், பள்ளிகள் தொடங்குவதென 2005ம் ஆண்டு சுவாமிகள் விரும்பினார்கள். அதனைத் தொடர்ந்து உடற்பயிற்சிக் கல்லூரிக்கு விண்ணப்பிக்கப்பட்டது.

(B1) உடற்பயிற்சிக் கல்லூரி :

ஆகஸ்ட் மாதம் 2007ம் ஆண்டு தேசிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் தென்னகக் கூட்டமைப்பின் அனுமதி (NCTE - SRC) பெற்று தமிழக அரசின் அங்கீகாரமும், தமிழ்நாடு உடற்பயிற்சி பல்கலைக் கழகத்துடன் இணைப்பும் பெற்று "கோவிலூர் ஆண்டவர் உடற்பயிற்சிக் கல்லூரி" தொடங்கப் பெற்று இளநிலை பட்டப் படிப்பு (B.P.Ed.,)சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதற்காக 12.5 ஏக்கர் இடமும் வேண்டிய அளவு கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளன. விளையாட்டுத் திடல்களும் 16 விதமான உடற்பயிற்சி செய்யும் ஜிம்மும், மைதானமும், 400 மீ ஓடுகளமும்,

சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளன. முனைவர், A.M. மூர்த்தி (முன்னாள் கல்வித் துறைத்தலைவர், அழகப்பா பல்கலைக்கழகம்) அவர்களை முதல்வராகக் கொண்டு 5 ஆசிரியர்களுடன், 31 மாணவர்களுடன் உடற்பயிற்சி பட்ட படிப்பு (B.P.Ed.,) தொடங்கப் பெற்றது.

2008ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உடற்பயிற்சி பட்ட மேற்படிப்பு (M.P.Ed.,2 ஆண்டு படிப்பு) என்.சி.டி.இ அங்கீகாரமும், தமிழ்நாடு உடற்பயிற்சி பல்கலைகழகத்தின் இணைப்பும் பெற்று தொடங்கப்பட்டு நடைபெறுகின்றது. இரண்டு வகுப்புகளிலும் தமிழ்நாடு உடற் பயிற்சி பல்கலைக் கழகத்தினால் அனுமதிக்கப் பட்ட எண்ணிக்கையுள்ள மாணவர்கள் சேர்ந்து பயின்று வருகிறார்கள். தற்போது 10 ஆசிரியர்கள் 115 மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

2009ம் ஆண்டு M.Phil., ஆய்வுப் படிப்பு தமிழ் நாடு உடற் பயிற்சிப் பல்கலைக்கழகத்தின் அனுமதி பெற்று கடந்த 2 ஆண்டுகளாக 5 மாணவர்கள் ஆய்வு மேற்கொண்டுள்ளார்கள். முனைவர்.A.M.மூர்த்தி அவர்கள் 70க்கும் மேற்பட்ட மாணவர்களை முனைவர் பட்ட ஆய்வாளர்களாக வழி நடத்தி அவர்கள் பட்டம் பெற உதவியிருக்கிறார்கள். இப்பொழுது நம் கல்லூரியிலும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் தமிழ்நாடு உடற்பயிற்சி பல்கலைக் கழகத்திலும், அழகப்ப பல்கலைக்கழகத்திலும் ஆய்வு செய்து வருகிறார்கள்.

2007ம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டியற் பல்கலைக் கழகத்தின் சார்பில் கல்லூரிகட்கு இடையேயான தடகள போட்டி கோவிலூரில் நடைபெற்றது. குருமகா சந்நிதானம் தலைமை ஏற்க அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேரா.முனைவர் பி. இராமசாமி அவர்கள் போட்டிகளைத் துவக்கி வைத்தார்கள். தமிழகத்தில் உள்ள

கல்லூரிகளில் இருந்து ஏறக்குறைய இருநூறு மாணவ மாணவிகள் கலந்து கொண்டு திறமையை வெளிப்படுத்தினார்கள். கல்லூரி முதல்வர் பேராசிரியர் முனைவர் மூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.

16ம் தேதி தவத்திரு சுவாமிகள் தலைமை தாங்கி ஆசி வழங்கினார்கள். தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வியியற் பல்கலைக்கழத்தின் துணைவேந்தர் முனைவர் பேராசிரியர் திருமலைசாமி அவர்கள் பரிசு வழங்கி வாழ்த்தினார்கள். அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் முனைவர் தண்டபாணி அவர்கள் வாழ்த்திப் பேசினார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கல்வியற் தலைவர் பேராசிரியர் முனைவர் வைத்தியநாதன் அவர்கள் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்திப் பேசினார்கள். 2008ம் ஆண்டு பெண்கள் கிரிக்கெட், Mens Volleyball, யோகா கருத்தரங்கு முதலியவைகள் நடத்தப்பெற்றன. 2009ம் ஆண்டு தடகளப்போட்டி நடத்தப்பெற்றது. 28 மார்ச் மாதம் 2010 அன்று மின்னொளி அமைத்து இரவு நேரத்திலும் Basket Ball விளையாடும்விதமாக ("FLOOD LIT BASKETBALL STADIUM") ஸ்டேடியம் ஒன்று Dr.C. Thangamuthu (Chairman - NCTE, SRC, Bangalore- Former Vice Chancellor of Bharathidasan University) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 2010ம் ஆண்டு செப்டம்பர் 10, 11 மற்றும் 12ம் தேதிகளில் பெண்கள் கூடைப்பந்து (Basket Ball - Womens) , ஆண்கள் பெண்களுக்கான கையெறிபந்து (Hand Ball - Men and Women's) , ஆண்களுக்கான கபடி (Kabadi - Men) ஆகிய அனைத்துக் கல்லூரி விளையாட்டுப் போட்டிகள் கோவிலூரில் நடைபெற்றது. இந்தப் போட்டிகளை அழகப்பா பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் முனைவர் A. செண்பகவல்லி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். பரிசளிப்பு விழாவும், கோவிலூர் ஆண்டவர் சமுதாயக் கல்லூரி தொடக்கவிழாவும் செப்டம்பர் மாதம் 12ம் தேதி மாலை

4.00 மணிக்கு நடைபெற்றது. குருமகா சந்நிதானம் தலைமையில் முனைவர் பேராசிரியர் VR. முத்துக்கருப்பன் (முன்னாள் துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்) அவர்கள் கோவிலூர் ஆண்டவர் சமுதாயக்கல்லூரியைத் தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாடு உடற்பயிற்சி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் வைத்தியலிங்கம் அவர்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்தினார்கள். முன்னாள் ஒலிம்பிக் மற்றும் ஆசிய தடகள வீரர் R. நடராஜன் அவர்கள் போட்டியாளர்களை வாழ்த்தி உற்சாகப் படுத்தினார்கள். இவ்விழாவிற்கு பேராசிரியர் முனைவர் AM. மூர்த்தி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, தாளாளர் மெ.மெ.மெய்யப்பன் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்கள்.

(B2) " கோவிலூர் ஆண்டவர் யோகா ஆராய்ச்சி மையம்"

தமிழ்நாடு உடற்பயிற்சி பல்கலைக் கழகத்தின் கூட்டு முயற்சியுடன், பட்டயப்படிப்பு (Diploma), முதுகலைப்பட்டம் (P.G. Diploma), முதுகலைப் பட்டயப்படிப்பு (M.Sc.,Yoga), ஆகியவை 2007ம் ஆண்டு முதல் பகுதி நேர வகுப்புகளாக நடைபெற்று வருகின்றன. இதன் மூலமாக 3 ஆண்டுகளில் ஏறக்குறைய 300 பேருக்கு மேற்பட்டவர்கள் பயனடைந்து வருகின்றனர். 2008ஆம் ஆண்டு அனைத்திந்திய யோகாக் கருத்தரங்கம் நடைபெற்றது.

(B3) நாச்சியப்ப சுவாமிகள் பாலிடெக்னிக் கல்லூரி :

2009 ம் ஆண்டு செப்டம்பர் 1ம் தேதி மத்திய, மாநில அரசுகளின் அங்கீகாரமும் அனுமதியும் பெற்று "நாச்சியப்ப சுவாமிகள் பாலிடெக்னிக் கல்லூரி" தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில், மெக்கானிக்கல், சிவில், எலக்ட்ரிக்கல் & எலக்ட்ரானிக்ஸ், எலக்ட்ரானிக்ஸ் & கம்யூனிக்கேஷன் ஆகிய நான்கு பிரிவுகளிலும் மாணவர்கள் சேர்க்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பேராசிரியர். த. ஜெயசீலன் (முன்னாள்

முதல்வர் அழகப்பா பாலிடெக்னிக் கல்லூரி) அவர்கள் தலைமையில் தகுதியுள்ள ஆசிரியப் பெருமக்கள் தரமான கல்வியை வழங்கி வருகிறார்கள். இதற்கு வேண்டிய ஆய்வு உபகரணங்களும், இயந்திரங்களும் பொருத்தப்பட்டுள்ளன. 20.09.2009 அன்று இதற்கான தொடக்கவிழா நடத்தப்பெற்றது. அதில் கோவிலூர் ஆதீனம் சீர் வளர் சீர் நாச்சியப்ப சுவாமிகளின் முன்னிலையில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில், இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பெரியகருப்பன் அவர்கள் கல்லூரி கட்டிடங்களைத் திறந்து வைத்தார்கள். முன்னாள் மதுரை மீனாட்சியம்மன் கோவில் தக்கார் கருமுத்து. கண்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். டாக்டர் பிச்சைக் குருக்கள், பத்மஸ்ரீ முத்தையா ஸ்தபதி ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். தாளாளர் மெ.மெ. மெய்யப்பன் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்கள்.

(B4) கோவிலூர் ஆண்டவர் மெட்ரிக்குலேஷன் பள்ளி :

2010ம் ஆண்டு ஜூன் மாதம் 8ம் தேதி முதல் கோவிலூர் ஆண்டவர் மெட்ரிக்குலேஷன் பள்ளி துவங்கப்பட்டது. அதிலும் L.K.G. முதல் 8வது வரை வகுப்புகள் நடத்த தமிழ்நாடு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 5 ஏக்கர் நிலப்பரப்பில் தற்பொழுது விசாலமான வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் படிப்பு வசதிகள் மற்றும் கம்யூட்டர் அறைகள் முதலியன கட்டப்பட்டுள்ளன. பரந்து விரிந்த விளையாட்டு மைதானம். தற்பொழுது 150 மாணவர்கள் வரை கல்வி பயின்று வருகிறார்கள். அதற்கு பேராசிரியர் V. பாலசந்திரன் (முன்னாள் ஆங்கிலத் துறைப் பேராசிரியர் - அழகப்பா கல்லூரி) அவர்கள் முதல்வராக இருக்கிறார்கள். மேலும் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் ஆசிரியர்களாக பணியாற்றுகிறார்கள்.

(B5) கோவிலூர் ஆண்டவர் சமுதாயக் கல்லூரி :

2010ம் ஆண்டு செப்டம்பர் 12ம் தேதி "சமுதாயக் கல்லூரி" ஒன்று தமிழ்நாடு உடற்பயிற்சி பல்கலைக்கழகத்தின் அனுமதி பெற்று தொடங்கப்பட்டுள்ளது. அதில் 17 வகையான பாடத்திட்டங்கள் கற்பிக்கப்பட இருக்கின்றது.

பாடத்திட்ட விவரங்கள் :

1. கைபேசி பழுதுபார்த்தல் (Mobile Phone Servicing)
2. குழந்தை நலக் காப்பகம் மற்றும் அது சம்பந்தமான படிப்பு (Early Childhood Care & Education)
3. தண்ணீர் குழாய் முதலியவைகளை சீர் செய்யும் தொழில் படிப்பு (Plumbing)
4. வீட்டு மின்சாரம் சம்மந்தமான தொழில் படிப்பு (House Electrician)
5. வீட்டு மின்விசையோடு தொடர்பு கொண்ட கருவி படிப்பு (Servicing of Household Electrical Appliances)
6. உலோகத்தகடு செய்தல் படிப்பு (Sheet Metal Fabrications)
7. காய்ச்சி தட்டி இணைக்கும் நுணுக்கப் படிப்பு (Welding Technology)
8. குளிர்சாதனம் பழுதுபார்த்தல் படிப்பு (Air Conditioninig & Refrigeration)
9. இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனம் பழுது பார்த்தல் படிப்பு (Two Wheeler Mechanism and Motor Mechanism)
10. இயந்திர நுணக்கங்களில் தேர்ந்தவர் படிப்பு (பிரத்தியேகமான இயந்திரம்) (Mechanist - Special Machines)
11. நாதஸ்வர கலை படிப்பு (Nathaswaram)
12. தவுல் கலை படிப்பு (Thavil)
13. கோவில் கட்டட நிர்மாணக் கலை படிப்பு (Temple Architecture & Sculpture)

14. ஐம்பொன் சிலை செய்தல் படிப்பு (Metal Carving & Sculpture)
15. மரச்சிற்பம் செய்தல் படிப்பு (Wood Carving & Sculpture)
16. திருமுறை (மரபு வழி இசை) (Traditional Music)
17. கோவில் பூசாரி பயிற்சி (Temple Priest Training - Agamam)

வீரனும், பேரனும்

நம் நாட்டில் சிலைக் கோயில்கள் எல்லாம் கலைக் கோயில்களாகக் காட்சியளிக்கின்றன. கல்லிலே கலை வண்ணம் கண்ட தமிழன் அந்தக் கல்லிலே கடவுளைக் கண்டான். கலையும் கடவுளும் கைகோத்து நிற்கும் காட்சியே நம் அலயங்களின் பெருகையாகும். அன்பில் சிறந்த கண்ணப்பரைப் பாடவந்த சுந்தரர் அவரைக் கலைமலிந்த சீர்நம்பி என்று பாடினார். கடவுளை உணர்ந்தவர் கலைகளை வளர்ப்பவர் ஆவார். கோவிலூரில் கலைக்கோயில் கட்டிய கோவிர்லூர் ஆண்டவர் ஒரு முறை கூறினார். "இந்த மடத்தின் நோக்கத்தை முழுவதுமாக நிறைவேற்றி இதைக் குன்றிலிட்ட விளக்காக மாற்ற முதலில் வீரன் தோன்றுவான். பிறகு பேரன் தோன்றுவான்" என்று, இதன்படி இம்மடத்தில் ஐந்தாவது மடாதிபதியாக வீற்றிருந்த வீரப்ப சுவாமிகளும், இப்பொழுது பனிரண்டாவது மடாதிபதியாக வீற்றிருக்கும் ஆண்டவரின் பேரனான நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகளும் கோவிலூர் மடத்தின் பெருமையை உலகம் முழுவதும் பரப்பி ஆண்டவர் வாக்கை நிறைவேற்றியிருப்பது வணங்கி மகிழத்தக்கது.

ஐந்தும் பனிரண்டும் சமய உலகில் பெரிதும் சிறப்புற்றவை. அஞ்செழுத்தப் பெருமானின் அடிபரவும் திருமுறைகள் பனிரண்டாகும். அஞ்செழுத்தின் புகழ்பாடும் திருமந்திரநூலில் ஒவ்வொரு பாடலும் அடிக்குப் பனிரண்டு எழுத்துக்களைக் கொண்டு அமைந்தவை.

சிவபெருமானுக்கு உரிய மூன்று கண்களில் வலக்கண் சூரியன் இடக்கண் சந்திரன் நெற்றிக்கண் தீக்கடவுள் (அக்கினி) அதுபோலக் கோவிலூர் மடாலயத்தில் ஆற்றல் மிக்க வலக்கண் ஆகத் திகழ்ந்தவர் கோவிலூர் ஆண்டவர். அருள்பொழியும் இடக்கண்ணாகத் திகழ்பவர் நாச்சியப்ப ஞான தேசிகர். தீயவற்றை எரிக்கும் நெற்றிக் கண்ணாகத் திகழ்ந்தவர் வீரப்ப சுவாமிகள்.

கோவிலூர் மடத்தை நிறுவிய முத்துராமலிங்க ஞான தேசிகர் கோவிலூர் ஆண்டவர் என்று போற்றப்பெற்றார். இது போலவே திருக்களர் என்ற தலத்தில் கோவில் கட்டிய வீரப்ப சுவாமிகள் திருக்களர் ஆண்டவர் என்று போற்றப் பெற்றார். இது இவர்கள் இருவருக்கும் உள்ள ஒற்றுமை. இதுபோலவே வீரப்ப சுவாமிகளுக்கும் நாச்சியப்ப சுவாமிகளுக்கம் ஓர் ஒற்றுமை உண்டு. வீரப்ப சுவாமிகள் 1911 ஆம் ஆண்டில் வைகாசி விசாகப் பெருநாளன்று இறைவனோடு இரண்டறக் கலந்தார். அதற்குப்பின் 12 ஆண்டுகள் கழித்து இப்பொழுது பனிரண்டாவது பட்டத்தில் எழுந்தருளி அருளாட்சி நடத்தும் நாச்சியப்ப சுவாமிகள் அதே வைகாசி விசாகப் பெருநாளில் (29.5.1923) உலகம் உய்யத் திரு அவதாரம் செய்தார்கள். விசாகம் முருகனுக்குரியது. அவன் விசாகப் பெருமான். வைகாசி விசாகம் முழுநிலவு நாள். அந்த நாளில் இறைவன் திருவடி அடைந்த வீருப்ப சுவாமிகள், இறைவன் கட்டளையால் மீண்டும் அதே விசாக நாளில் நாச்சியப்ப சுவாமிகளாகத் தோன்றினார்கள் என்று கொள்ளப் பெரிதும் இடமிருக்கிறதல்லவா ! வீரனும் பேரனும் கலையார்வமிக்கவர்கள். முன்னவர் கலையுணர்வு திருக்களர் ஆலயமாகவும் திருத்தேராகவும் வெளிபட்டது. பின்னவர் கலையுணர்வு அருந்தமிழ் நாட்டில் வெளிப்பட்டு அமெரிக்கா நாட்டினராலும் புகழப் பெற்றது. அச்சுக்கலை உணர்வும், புகைப்பட உணர்வும் மெச்சுபுகழ் நாச்சியப்பர் வியன்பணியில் சிறந்தோங்கி வளர்கின்றன.

இந்தப் பெருமக்கள் இருவருக்கும் ஒரே ஒரு நோக்கம் தான் உண்டு. அது "தேவநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க வேண்டும். ஆலயக் கலைகள் முன்பு இருந்தது போல இப்பொழுது வளரவேண்டும்". இதனாலேயே இவர்கள் இருவரும் புகழப் பெறுகிறார்கள். இருவருமே கருணையும் கண்டிப்பும் உடையவர்கள். வேடதாரிகளை அடையாளம் கண்டு விலக்கி விடுவதில் இருவரும் வல்லவர்கள். இருவர் முகத்திலும் ஒளிரும் அருள்ஒளி உள்ளத்தில் உண்மைஒளி உண்டாவதைக் காட்டத்தக்கது.

வீரனும் பேரனுமாக விளங்கும் சுவாமிகள் இருவருமே ஈடிணையற்ற செயல்திறன் பெற்றவர்கள். எதையும் கலைக் கண்கொண்டு பார்த்துச் சிறப்பாகவும், திறமையாகவும் செய்பவர்கள். வீரன் காலத்தில் ஊரறிந்த சிற்றூரான கோவிலூர், ஆண்டவரின் பேரன் காலத்தில் உலகறிந்த பேரூராக இப்பொழுது வளர்ந்து கொண்டிருக்கிறது.

வீரப்பசுவாமிகள் காலத்தில் அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து திருப்பணி செய்து நகரத்தார் பெருமக்கள் முன்னேற்றம் பெற்றார்கள். அதுபோல இப்பொழுதும் நாச்சியப்ப சுவாமிகள் தலைமையில் நகரத்தார் மட்டுமின்றி நம் நாட்டு மக்கள் அனைவரும் முன்னேற ஒரு வழி பிறந்திருக்கிறது.

திருக்களரில் திருத்தேர் செய்து வைத்துத் தேர் இழுத்த பெருமை வீரப்ப சுவாமிகளுக்கு உரியது. நாச்சியப்ப சுவாமிகள் கோவிலூரில் திருத்தேர் உருவாக்கி உள்ளார்கள். அதுபோல இந்தியப் பண்பாட்டுச் சிறப்பை உணர்த்த சனாதன தருமப் பல்கலைக்கழகம் என்ற புதிய திருத்தேரை உருவாக்கிக் கொண்டிருக்கும் பெருமை நாச்சியப்ப சுவாமிகளுக்கு உரியது.

இரண்டு பெருமக்களும் கலையார்வமும் பயிற்சியும் பெற்றவர்கள். வீரப்ப சுவாமிகள் சிற்பக்கலை வல்லுநர். நாச்சியப்ப சுவாமிகள் அச்சுக் கலை அரசர். கங்கையும் காவிரியும் இந்திய நாட்டை அரவணைத்துக் காப்பது போல இவர்கள் இருவரும் ஆண்டவரின் அடியார் கூட்டத்தை அரவணைத்துக் காப்பாற்றும் அளவற்ற அருளாளர்கள்.

நிறைவுரை :

இந்திய நாட்டிலுள்ள திருமடங்களில் மிகவும் கொடுத்து வைத்த மடம் கோவிலூர் மடம். மடத்திலுள்ள சொத்துக்களின் வருமானத்தில் ஒரு பகுதியைத் திருப்பணிக்கு ஆக்கும் மடங்கள் அதிகமுள்ள நாட்டில், தானே தேடிய பெருஞ்செல்வத்தை, மடத்தின் பெயரால், அறப்பணிக்கும் திருப்பணிக்கும் பயன்படுத்தும் அற்புதத் துறவியை உலகம் இப்பொழுதுதான் சந்தித்திருக்கிறது. ஓராயிர வருடம் ஓய்ந்துகிடந்த பின்னர் வாராது போல வந்த மாமணியாக விளங்கும் நாச்சியப்ப சுவாமிகள் செய்யும் பணி, அளத்தற்கரியது. ஒரு மாநில அரசு செய்யத்தக்க பணிகளை ஒரு மடாதிபதி செய்கிறார். நம் தவம் அவர் வாழும் காலத்தில் நாம் வாழ்வது. எண்பதாண்டு கண்ட சுவாமிகள் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறோம், எங்களுக்காக இன்னும் நூற்றாண்டு வாழ்க என்று !

எல்லா உயிரும் இறைவன் அடிபேணிக்
கல்வியால் ஓங்கிக் கடைத்தேறச் – செல்வமுடன்
நன்னயம் சேர் கோவிலூர் நாச்சியப்ப மாமுனிவ !
இன்னுமொரு நூறாண் டிரும்.

கோவிலூர்த் திருமடத்தின் கிளை மடங்கள்

1. **கோவிலூர் மடாலயம்**

   கோவிலூர் - 630 807.

   காரைக்குடி அருகில்

   சிவகங்கை மாவட்டம்.

   நிர்வாகி : திரு. மெ.மெ.மெய்யப்பன்

   தொலைபேசி : 04565 - 236846

2. **ஈசான்ய மடம்**

   புதிய பேருந்து நிலையம் அருகல்

   திருவண்ணாமலை - 606 601.

   பொறுப்பாளர் : திரு. இராம. அண்ணாமலை (எ) மீனாட்சிசுந்தரம்

   தொலைபேசி : 04175 - 252549

   (விருந்தினர் அறை வசதி உண்டு)

3. **சண்முக சுவாமி மடம்**

   விழுப்புரம் - பாண்டி சாலை

   வளவனூர் - 605 108.

   பொறுப்பாளர் : சாது. சுப்ரமணிய சுவாமி

4. **சபாபதி சுவாமிகள் மடம்**

   தென்பள்ளிப்பாட்டு

   மேட்டுப்பாளையம்

   கலசப்பாக்கம் - 606 751.

   திருவண்ணாமலை மாவட்டம்.

5. **கோ.சித. மடாலயம்**

   (பொன்னம்பல சுவாமி மடம்)

   50, மன்னார்குடி சாலை

   சிதம்பரம் - 608 001.

   பொறுப்பாளர் : திரு. சிவ. இராமனாதன்

   தொலைபேசி : 04144 - 220030

   (விருந்தினர் அறை வசதி உண்டு)

6. **கோ.சித. மடாலயம்**
(குத்துவராய சுவாமிகள் மடம்)
விருத்தாசலம் சாலை
எறும்பூர் - 608 704.
(சேத்தயா தோப்பு அருகில்)

7. **கோ.ஆ.வீர. மடாலயம்**
(திருக்களர் ஆண்டவர் மடம்)
திருக்களர் - 614 710.
நடுவக்களப்பால் வழி
மன்னார்குடி வட்டம்
திருவாரூர் மாவட்டம்
தொலைபேசி : **04367 - 204354**

8. **கோ.ஆ.பொ. மடாலயம்**
பொருள் வைத்த சேரி
(புறவாச்சேரி)
சிக்கல் அருகில் - **611 108.**
நாகை மாவட்டம்.
பொறுப்பாளர் : திரு. ஆர். சோமசுந்தரம்
தொலைபேசி : 04365 - 245753
(விருந்தினர் அறை வசதி உண்டு)

9. **நாராயண சுவாமி மடம்**
முதன்மைச் சாலை
அண்ணா சிலை அருகில்
மானாமதுரை - **630 606.**
சிவகங்கை மாவட்டம்
பொறுப்பாளர் : திரு. காளையப்ப செட்டியார்

10. **காசிகாநந்த சுவாமி மடம்**
மதுரை முதன்மைச் சாலை
திருப்புவனம் - 630 611.
சிவகங்கை மாவட்டம்
தொலைபேசி : **04575 - 265684**

11. **குட்டைய சுவாமி மடம்**

164, தெற்கு வெளி வீதி, மதுரை - 625 001.

பொறுப்பாளர் : அருண் வீரப்பன்

தொலைபேசி : 0452 2320017

12. **கா.செ. வேதாந்த மடம்**

தெற்கு ரத வீதி

காளையார் கோவில் - 623 551.

சிவகங்கை மாவட்டம்.

பொறுப்பாளர் : வெ. சொக்கலிங்கம் செட்டியார்

13. **கோவிலூர் மடாலயம்**

50 52, குப்பையா செட்டி தெரு

(மாம்பலம் இரயில் நிலையம் மேட்லி சாலை

கீழ்பாலம் அருகில்)

மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.

பொறுப்பாளர் : திரு. க.லெ. கண்ணப்பன்

(விருந்தினர் அறை வசதி உண்டு)

சென்னை அலுவலகம்

14. **காலக்ஷேத்ரா பப்ளிகேஷன்ஸ்**

84, கலாக்ஷேத்ரா சாலை

திருவான்மியூர்

சென்னை - 600 041.

பொறுப்பாளர் : திரு. மு.பழனி

தொலைபெசி : 044 24531390

15. **Koviloor Vedanta Mutt**

(Near Swami Dayananda Ashram)

Post Box No.20, Purani Jhadi

Rishikesh - 249 201. Utranchal.

Manager : Mrs. Vishalatchi Meyyappan

Phone No. : 0135 - 2436968

(Guest Room & Food facilities available)

16. **Koviloor Vedanta Mutt**
20, South Patel Nagar
(Near) Patel Nagar Metro Station
New Delhi - 110 008.
In - Charge : Mrs. Vishalatchi Meyyappan
(Guest Room Available)

17. **Varanasi - Uttar Pradesh**
31000 Sq. Ft. வாங்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டப்பட உள்ளது.

18. **Bandaripuram - Maharashtra**
1.5 Acre வாங்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டப்பட உள்ளது.

Our Educational Institutions

1. Koviloor Andavar Institute of Traditional Arts & Culture.
2. Sri La Sri Muthuramalinga Andavar Nursery & Primary School.
3. Koviloor Andavar Montessori School
4. Koviloor Andavar College of Physical Education
5. Koviloor Andavar Yoga Research Institute
6. Nachiappa Swamigal Polytechnic College
7. Koviloor Andavar Matriculation School
8. Koviloor Andavar Community College

